# ஜோர்டானுக்குள் இஸ்ரேல் அணிகள் ஊடுருவல்


Registered as a News paper in C ylon விலே சதம் 15 ★

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும் தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

**ஈழநாடு**

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்:132
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் ஆனி 10 ரபி. ஆகி 8 செவ்வாய்க்கிழமை [24-6-69]


## பொதுமக்கள் வாழும் பகுதியில் மூர்க்கமான தாக்குதல்

அம்மான், ஜூன் 23

ஜோர்டானுக்குள் நேற்று இஸ்ரேலிய இராணுவ அணியொன்று ஊடுருவிச்சென்று ஜோர்டானிய இராணுவ நிலைகள்மீதும் பொதுமக்கள் வ ழும் பகுதிகளிலும் கடுமையான தாக்குதல்களை நடத்தியது.

இந்தத் தாக்குதலில் பலத்த ஆட்சேதம்ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

மூன்று ஜோர்டானியர் இஸ்ரேலுக்குள் ஊடுருவி நடத்திய தாக்குதலுக்கு பதில் நடவடிக்கையாகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேலியர் கூறினார்கள்.

ஐக்கிய அரபுக் குடியரசு நிலைகள்மீதும் நேற்று இம்மாதிரி பெரும் தாக்குதல் ஒன்று நடைபெற்றது. தாக்குதலை நடத்திவிட்டு இஸ்ரேலிய துருப்புகள் தமது நிலைகளுக்குத் திரும்பிவிட்டதாக இஸ்ரேலிய தரப்பில் கூறப்பட்டது. இருதரப்பிலுமே பலத்த சேதம் ஏற்பட்டிருக்கக்கூடுமென்று கருதப்படுகின்றது. ஆனால் அரபுத்தரப்பில் விபரம் ஒன்றும் தெரியவில்லை.

### அரபு மந்திரிகள் கூடினர்

நேற்று இஸ்ரேலியர் நடத்திய திடீர் தாக்குதல்களையடுத்து ஐக்கிய அரபுக் குடியரசு மந்திரிகள் அவசரமாகக்கூடி ஆலோசனைகள் நடத்தினார்கள். தாக்குதல்கள் பற்றியும் சேதங்கள் பற்றியும் அதிபர் நாஸர் தமது மந்திரிகளுக்கு எடுத்துக் கூறியதாகத் தெரிகின்றது.

## ஆலய வாசல்களில் தடைகளை பொலிசார் அகற்றலாம்

### அட்டர்ணி ஜெனரல் அறிவிப்பு

கோட்டை, திங்கள்

**ஆலயங்களுள் ஒரு பகுதியினர் சென்று வழிபடுவதற்கு அனுமதி அளிக்கும் ஆலய நிர்வாகத்தினர் மக்களில் மற்றொருபிரிவினர்சென்று வழிபடுவதைத் தடைசெய்யுமுகமாக ஆலய வாயிலில் முட்கம்பி வேலிகளையோ, மற்றும் தடைகளையோ போட்டாலும், ஆட்கள் தடைசெய்து நின்றாலும் அந்தத்தடைகளை அகற்றுவதற்குப் பொலிசாருக்கு அதிகாரம் உண்டு என்று அட்டர்ணி ஜெனரல் அறிவித்துள்ளார்.**

ஹரிஜன ஆலயப் பிரவேசத்தைத் தடுக்குமுகமாக எந்த ஆலயத்தின் முன்பாகவும் தடைகள் போடப்பட்டால் அத்தடைகளை பொலிசார் அகற்ற முடியுமென்று அட்டர்ணி ஜெனரல் தெரிவித்துள்ளார்.

பொலிசார் தடைகளை நீக்க முடியாது. இதேசமயம் ஆலயத்தின் பக்கவாசல்களினால் சிலராவது ஆலயத்துள் செல்லமுடியுமானால் அதே வாசல்வழியாக ஹரிஜனரும் ஆலயத்துள் செல்வதைப் பொலிசார் தடுக்கமாட்டார்கள்.

நாவலர் பேச்சுப்போட்டி

## மூவருக்கு முதலாவது இடம் ஆண்களுக்கு 2வது இடமில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

நாவலர் மகாநாட்டையொட்டி வடமாநில மாணவர்களுக்கிடையே நடந்த பேச்சுப்போட்டியில் பெண்களுக்கான பிரிவில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி திலகவதி சுப்பையா முதலாவது இடத்தைப் பெற்றார். ஆண்களுக்கான பிரிவில் யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பொன்னம்பலம் இரகுபதியும் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த சண்முகலிங்கம் நாகலிங்கமும் முதலாவது இடத்தைப் பெற்றார்கள். இவர்கள் மூவருக்கும் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

முதலாவது இடத்தைஇருவர் பெற்றுக்கொண்டதால் ஆண்களுக்கான பிரிவில் கரசு பெற்றார். பெண்களுக்கான பிரிவில் இரண்டாவது இடத்தை மாதகல் காந்தயோசப் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி சாந்தகுமாரி இராமநாதனும், மூன்றாம் இடத்தை வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி நித்தியவதி ஜெயசிங்காவும் பெற்றனர்.

ஆண்கள் பிரிவிலும் பெண்கள் பிரிவிலும் முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்கள் 30-ம் தேதி காலை நடைபெறும் நாவலர் மகாநாட்டில் பேசுவார்கள் வட்டார பிரிவில் பரிசு பெற்றவர்களுக்கு மகாநாட்டில் சான்றிதழ் வழங்கப்படும்.

நாவலர் பற்றி இறுதிப் பேச்சுப் போட்டிகள்நேற்று நாவலர் பாடசாலை மண்ட

## பாழடைந்தகிணற்றினுள் இரண்டு மூடை ஜவுளி கூப்பன்கள்

### வல்வை பொலிஸார் கைப்பற்றினர்

— நமது இமையாணன் நிருபர் சோ. சபானந்தன் —

இமையாணன், ஞாயிறு

வல்வெட்டித்துறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் திரு எஸ்.பி.ஜெயசிங்கா தலைமையிலான ஒரு பொலிஸ் கோஷ்டி, பாழடைந்த ஒரு கிணற்றைச் சோதனையிட்டபோது அங்கிருந்து ஜவுளிக் கூப்பன் புள்ளிகள் அடங்கிய இரு சாக்கு மூடைகளைக் கைப்பற்றினர்.

வல்வெட்டியில் ஒரு கோவிலுக்கு அருகாமையிலுள்ள ஒரு கிணற்றிலேயே நேற்றுக் காலை சுமார் 7-30 மணியளவில் இம்மூடைகளைப் பொலிஸார் கைப்பற்றினர்.

இப்போது செல்லுபடியாகக்கூடிய 114, 115, 116ம் இலக்கங்களையுடைய கூப்பன் புள்ளிகள் ஒரு சாக்கு மூடைக்குள் சொரியலாகவும், மற்றொரு மூடைக்குள் கட்டுகளாகவும், இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகள் ஒவ்வொன்றிலும் மூன்று இலக்கங்களையும் கொண்ட ஐநூறு துண்டுகள் மொத்தமாக ஆயிரத்து ஐநூறு புள்ளிகள் காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

## நாவலர் சிலை தேசபவனி இன்றுகொழும்பில் ஆரம்பம்

(நமது விழா நிருபர்)

கோட்டை, செவ்.

தமிழுக்கும் சைவத்திற்கும் அயராது உழைத்த நாவலர் பெருமானின் திருஉருவப்பவனி இன்று நண்பகல் 1 மணிக்கு கொட்டாஞ்சேனை விவேகானந்த சபை மண்டபத்திலிருந்து ஆரம்பமாகின்றது. சிலை ஊர்வலம் செய்யும் பாதை முழுவதும் தோரணங்களாலும், மலர்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது, சில இடங்களில், சிலையை வர

இன்று காலை 11 மணிக்கு திருவுருவச்சிலை, விவேகானந்த சபையை வந்தடையும் பிற்பகல் 1 மணிக்கு சபையிலிருந்து சிலை புறப்படும் புதுச்செட்டித்தெரு, ஜம்பட்டா வீதி, சென் அந்தனி மாவத்தை, தம்பையா சத்திரம், செட்டியார் தெருவழியாக ஊர்வலம் செல்லும். பிற்பகல் 2.30 மணிக்கு ஊர்வலம் ஐந்துலாம்படிச் சந்தியை வந்தடையும் 2.45 மணிக்கு ஐந்துலாம்படிச் சந்தியிலி

மாணவர்களது பக்திப் பாடல்களுடன் குடை, கொடி, ஆலவட்டங்களுடனும், செல் லும்.

மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வழியனுப்பு விழா ஆரம்பமாகும் மகா தேசாதிபதி, பிரதமர் ஆகியோர் உட்பட மந்திரிகள் செனட் சபை உறுப்பினர்கள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள், சமயப் பெரியார்கள், கல்லூரி அதிபர்கள், சிலைக்கு

## டோக்கியோவில் திருமதி காந்தி

டோக்கியோ, ஜூன் 23

இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி ஜப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாவது இடத்தைப் பெற்றார்கள். இவர்கள் மூவருக்கும் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

முதலாவது இடத்தைஇருவர் பெற்றுக்கொண்டதால் ஆண்களுக்கான பிரிவில் இரண்டாம் இடம் தெரிவு செய்யப்படவில்லை. மூன்றும் இடத்தை யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிவதட்சணமூர்த்தி திருநாவுக்

மகாநாட்டில் பேசுவார்கள் வட்டார பிரிவில் பரிசு பெற்றவர்களுக்கு மகாநாட்டில் சான்றிதழ் வழங்கப்படும்.

நாவலர் பற்றி இறுதிப் பேச்சுப் போட்டிகள்நேற்று நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது காலையில் பெண்களுக்கான போட்டியும் மாலையில் ஆண்களுக்கான போட்டியும் நடந்தது.

முன்பாகவும் தடைகள் போடப்பட்டால் அத்தடைகளை பொலிசார் அகற்ற முடியுமென்று அட்டர்ணி ஜெனரல் தெரிவித்துள்ளார்.

ஆனால் எவருமே ஆலயத்துள் செல்லாமலிருந்தால் ஹரிஜனரை மட்டும் ஆலயத்துள் செல்வதற்காக சிலராவது ஆலயத்துள் செல்லமுடியுமானல் அதே வாசல்வழியாக ஹரிஜனரும் ஆலயத்துள் செல்வதைப் பொலிசார் தடுக்கமாட்டார்கள்.

## பாப்பாண்டவர் தினம்

பண்டத்தரிப்பு, திங்கள் சின்னப்பரின் தினத்தையிட்டு இங்கு பல இடங்களிலும் விழா எடுக்கப்படவிருக்கிறது. அணிவகுப்பு, பாட்டு, பேச்சு, உருவப்படம் நீக்கம் போன்ற நிகழ்ச்சிகளும் இத்தினத்தில் இடம் பெறவுள்ளன.

## டோக்கியோவில் திருமதி காந்தி

டோக்கியோ, ஜூன் 23 இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி ஜப்பானில் நட்புமுறை விஜயமொன்றை மேற்கொண்டு இன்று டோக்கியோ வந்து சேர்ந்தார். டோக்கியோவில் வெளியாகும் எல்லா தேசிய பத்திரிகைகளும் திருமதி காந்தியை வரவேற்று செய்திகளும் அனுபந்தங்களும் வெளியிட்டிருக்கின்றன.

சபை மண்டபத்திலிருந்து ஆரம்பமாகின்றது. சில ஊர்வலம் செய்யும் பாதை முழுவதும் தோரணங்களாலும், மலர்களினுலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில், சிலையை வரவேற்பதற்காக பந்தல்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு மாநகரில் நிகழும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் மாணவிகள் உடுவச்சிலையை தொடர்ந்து பக்திப்பாடல்கள் பாடியபடி செல்வார்கள், ஊர்வலத்தை பார்வையிடுவதற்கான ஒழுங்குகள் எல்லாம் பூர்த்தியாகி விட்டன.

தனி மாவத்தை, தம்பையா சத்திரம், செட்டியார் தெருவழியாக ஊர்வலம் செல்லும். பிற்பகல் 2.30 மணிக்கு ஊர்வலம் ஐந்துலாம்படிச் சந்தியை வந்தடையும் 2.45 மணிக்கு ஐந்திலாம்படிச் சந்தியிலிருந்து புறப்பட்டு, பிரதான வீதி லோட்டஸ் வீதி, வழியாக காலி வீதிக்கு செல்லும். மாலை 3. 30மணிக்கு பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலையை ஊர்வலம் அடையும் ஊர்வலம் பம்பலம்பிட்டி தொடர்மாடிக் கட்டடத்திலிருந்து

ஆரம்பமாகும் மகா தேசாதிபதி, பிரதமர் ஆகியோர் உட்பட மந்திரிகள் செனட்சபை உறுப்பினர்கள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள், சமயப் பெரியார்கள், கல்லூரி அதிபர்கள், சிலைக்கு மலர் மாலை சூட்டி வணங்கி அஞ்சலி செலுத்துவார்கள்.

நாளை காலை இங்கிருந்து சிலை புறப்பட்டு நீர்கொழும்பு வழியாக வவுனியாவை நாளை பிற்பகல் 2 மணிக்கு சென்றடையும்.25,26-27.ம் தேதிகளில், சில முறையே கிளிநொச்சி, தொண்டம

(4-ம் பக்கமபார்க்க)

# ''வகுப்புவாதப் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்''

## அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் தீர்மானம்

வெள்ளவத்தை, திங்கள் ''எமது சமுதாயத்தில் ஒற்றுமை, கட்டுப்பாடு இல்லாத காரணத்தாலும் தான் தோன்றித் தலைவர்கள் நாளாந்தம் முளைத்துக் கொண்டு மக்களை ஏமாற்ற எண்ணுங் காரணத்தினுலும் நாம் உறுதியான, தகுந்த கொள்கைகளுக்கமைய எம்மை வழிநடத்த முடியாதிருக்கிறது. எமது அரசாங்கத்தின் சிங்களம் மாத்திரம் சட்டம் மிகவும் குறுகிய மனப்பான்மையுடையது. அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளினுல் அரசாங்கசேவையில் உள்ள பல தமிழ் ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நாட்டு நிர்வாகத்தில் தமிழுக்கு உரிய இடம் இருந்தும் அதனைப் பயன்படுத்தும் கணிசமான மக்கள் தொகை இருந்தும் சிங்களம் தெரியாத காரணத்தினுல் இவர்களுக்கு இழைக்கப்படும் பாரபட்சம் அநீதியானது. இதைக்கேட்க ஆட்களே இல்லையா?''

இவ்வாறு இலங்கை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் எட்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மீண்டும் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. இ. அந்தோனிப்பிள்ளைதமது தலைமையுரையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

சமாதானத்தை நிலைநாட்டவேண்டிய அரசியல்வாதிகள் என்றும் நிதானமிழக்கக்கூடாது. வேறுநாடுகளின் தேவையற்ற பிரச்சனைகளில் தலையிட்டு நேரத்தை வீணடிப்பதை விட எமது தலைவர்களும், அரசியல் வாதிகளும் எம்மை எதிர்நோக்கியுள்ள அத்தியாவசிய பிரச்னைகளில் தமது கவனத்தைச் செலுத்தும்படி வேண்டுகிறோம்.

வாழ்க்கைச் செலவுகள் நாளாவட்டத்தில் விஷம் போல் உயர்ந்து கொண்டு போகும் இக்கட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு வேதன உயர்வுவழங்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

எமது நாட்டின் பிரதமர் அடிக்கடி வலியுறுத்திவரும் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகச் சகல விஷயங்களிலும் பிரதமருடன் சேர்ந்து ஒத்துழைப்போம் தமிழ் மக்களின் பிரச்னைகளையும் மனிதாபிமானக் கண்ணேட்டத்துடன் அணுகும்படி அவரைக் கேட்டுக்கொள்கிறோம்.''

கொள்ளுப்பிட்டியிலுள்ள தேயிலைப் பிரச்சாரச்சபை மண்டபத்தில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டம் திரு. வ. நடராசாவின் தமித்தாய் வணக்கத்துடன் ஆரம்பமாகியது.

செயற்குழுவின் சார்பில் பின்வரும் தீர்மானங்களும் முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன,

சிங்களம், ஆங்கில மொழி மூலம் சேவைக்குச் சேர்ந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் தமிழ் மொழி மூலம் சேவைக்குச் சேர்ந்த ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

திறைசேரியின் புதிய ஊழியர்களின் சிங்களத்தேர்ச்சி சம்பந்தமான 701-ம் இலக்கச் சுற்றறிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது.

ரூபாவின் பெறுமதி இறக்கத்தினுலும் பிறகாரணங்களினுலும் நாளாந்தம், வேகமாக ஏறிவரும் விலைவாசியைக் குறைப்பதற்கு பண்டங்களின் கட்டுப்பாட்டு விலைகளை அரசாங்கம் அமுல் நடத்தவேண்டும்.

நாட்டில் குழப்பத்தையும் மீண்டும் வகுப்பு வாதத்தையும் தூண்டிவிடும் நோக்குடன் செயற்படும் சிங்கள, ஆங்கில தினசரிகளின் மீது அரசாங்கம் கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தபாற் தந்தித் திணைக்களத்தில் இன ரீதியான பதவி உயர்வுகள் நடைபெறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

சங்கத்தின் புதிய அலுவலர்கள் தெரிவைத் தொடர்ந்து திருவாளர்கள் வே. குமரகுரு, ச. தொ. புவிராஜசிங்கம், க. பேரம்பலம், வ. ஆ. தங்கவேலாயுதம், ச.அ. செபரத்தினம், வ. ஆ. சிவபாலரத்தினம், கே. தவராஜசிங்கம், ஜீவானந்தம், க. சிதம்பரநாதன், சிவலிங்கம் ஆகியோருட்படப் பலர் பேசினர்.

தீர்மானங்களைப் பிரதமருக்கு அனுப்பிவைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## சைவ மகாநாடு

சுழிபுரம், திங்கள் சண்டிலிப்பாய் இந்து வாலிபர்சங்கத்தினர் சைவ மகாநாடொன்றை அடுத்த மாதம் 6-ம்திகதி சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இம் மகா நாட்டில் உள்நாட்டு அறிஞர்களும் வெளிநாட்டு அறிஞர்களும்கலந்து கொள்ள விருக்கின்றனர். மகாநாட்டை உடுவில் எம். பி. திரு.வி. தர்மலிங்கம் கொடியேற்றி ஆரம்பித்து வைப்பார் எனத் தெரிவிக்கப் பட்டது.

### யாழ். நகரில் நாவலர் பெருவிழா

# 3 கல்லூரிகளுக்கு மட்டும் விடுதலை
# மாநாட்டு பந்தல் முகப்பு வேலை ஆரம்பம்

(நமது அலுவலக நிருபர் யோகி)

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணத்தில் நான்கு தினங்கள் நடைபெறும் நாவலர் பெருவிழாவில் மாணவர் கலந்துகொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு 3 நாட்கள் விடுதலை விட வேண்டும் என்ற கல்வி அமைச்சின் முடிவுக்கு இங்குள்ள சில கல்வி அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருப்பதாக ஆறுமுகநாவலர் சபையை சேர்ந்த ஒருவர் நேற்று தெரிவித்தார்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம் ஆகிய மூன்று கல்லூரிகள் மட்டுமே நாவலர் பெருவிழாவையொட்டி விடுதலைவிடமுடிவு செய்திருப்பதாக தெரிய வருகிறது.

மற்றும் கல்லூரிகளையும் விடுதலைவிட, அக்கல்லூரி அதிபர்கள் விரும்புகின்ற போதிலும் ஒரு சில கல்வி அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருக்கிறார்களென்றும், இது சம்பந்தமாக இன்று நாவலர் சபை உறுப்பினர்கள் முயற்சி எடுத்து வருவதாகவும், நாவலர் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடந்த அதிபர்கள் மகாநாட்டில் சில அதிபர்கள் விடுதலைவிட்டால் மாணவர்கள் வீட்டில் நின்றுவிடுவார்களென்றும், விழாவில் கலந்து கொள்ளமாட்டார்களென்றும் கருத்துத்தெரிவித்தனர்.

நாலவர் விழாவையொட்டி நடக்கும் 3 பெரிய ஊர்வலங்கள் போயா தினமான 29-ம் தேதி நடப்பதால் அன்றுவிடுதலை தேவையில்லையென்றும் மற்றும் 3 நாட்களுஞ் நிகழ்ச்சிகள் மாலையில் நடப்பதால் விடுதலை அவசியம் இல்லையென்றும் ஒரு அதிபர் இம்மகாநாட்டில் தெரிவித்தார். இக்கருத்தை அங்கு சமுகமளித்திருந்த வடபிரதேச கல்வி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலமும் மகாநாட்டிற்கு தலைமைதாங்கிய நாவலர் சபை பொதுச் செயலாளர் திரு. சிறிகாந்தாவும் ஆதரித்துப்பேசினர்.

விடுதலைதினமாக இருந்தால் மாணவிகள் வருவது கஷ்டமாக இருக்குமென்றும், பாடசாலை தினமாக இருந்தால் நேராக பாடசாலையிலிருந்து மாணவிகள், அணிவகுத்து, மகாநாட்டிற்கு செல்லமுடியுமென்றும், மகளிர் கல்லூரி அதிபர் ஒருவர் கருத்து தெரிவித்தார். அன்றைய மகாநாட்டில் பாடசாலைகளுக்கு விடுதலை விடுவது பற்றி எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

நாவலர் சபையினர் இவ் விஷயமாக ஏற்கனவே கல்வி மைச்சை சந்தித்தபோது, விடுதலை விடுவதற்கு கல்வி அமைச்சு சம்மதம் தெரிவித்தது. பாடசாலைகளை 3 நாட்கள் அதிபர்கள் விரும்பினுல் மூடலாமென்றும் அதற்கு பதிலாக வேறு மூன்று போயா நாட்களில் வேலை செய்யவேண்டும் என கல்வி அமைச்சு தெரிவித்திருந்ததாக, நாவலர் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

நாவலர் பெருவிழா நாட்களில் கல்லூரிகள் மூடப்படுவதில் தற்பொழுது சந்தேகம் எழுந்துள்ளதால் மாணவர் மத்தியில் எழுந்துள்ள உணர்ச்சி தடைப்பட்டுவிட்டதாகவும், அவர் தெரிவித்தார். கல்லூரிகளுக்கு விடுதலை விடப்படாவிடில் அரிய உரைகளையும் அளப்பரிய கருத்தரங்குகளையும், காணக்கூடிய சந்தர்ப்பங்களை மாணவர்கள் இழப்பார்கள் என்றும் அவர் மேலும் கூறினர்.

மேலிடம் அனுமதித்தால், நாவலரைப்போல் ஒரு தேசிய வீரரின் நினைவை கௌரவிக்கும் பொருட்டு எமது பாடசாலைகளையும் மூடுவதையிட்டு ஆட்சேபம் இருக்கமுடியாதென முஸ்லிம் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

### விவாத அரங்கு

யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நாவலர் விழாவையொட்டி நடந்த விவாத அரங்கில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பங்குபற்றவில்லை. நாவலர் உயர்ந்தது சமயப் பணியாலா? தேசியப் பணியாலா? என்ற விவாத அரங்கில், தேசிய பணியால் தான் நாவலர் உயர்ந்தார் என பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி மாணவர்கள் விவாதிக்க இருந்தனர். நேற்று முன்தினம் இவர்கள் விவாதஅரங்கிற்குவரவில்லை

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, நல்லூர் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி மாணவர்கள் மட்டுமே விவாத அரங்கில் கலந்துகொண்டனர். இம்மூன்று கல்லூரி மாணவர்களும், 1-ம் திகதி காலை மகாநாட்டின் விவாத அரங்கில் கலந்துகொள்வார்கள்.

திறந்தவெளிஅரங்கில் நிர்மாணிக்கப்படும் பிரமாண்டமான பந்தல் வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன. பத்தாயிரம் மக்கள் அமரக்கூடிய இப்பந்தலின் முகப்பு வேலைகள் நாளை மறுதினம் ஆரம்பமாகும் என பந்தல் அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

## 'உள்ளூர்வாசி வேண்டாம்'

யாழ்ப்பாணம், செவ்வாய் வகதடிப்பகுதியில் புதிதாக நியமனம் பெறவிருக்கும் இரு கிராமசேவகர்கள் இடத்திற்குக் கைதடியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படக்கூடாது என்று இரண்டாயிரம் கையெழுத்துகளைக்கொண்ட மகஜர் ஒன்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர் சுக்கும் சாவகச்சேரி எம். பி திரு. வி. என்- நவரத்தினத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களைக் கிராமசேவகர்களாக நியமித்தால் அவர்கள் பாரபட்சமாக நடப்பார்களென்று அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

மிகப் பரந்த நிலப்பரப்பையும் நெருக்கமான சனத்தொகையையும் கொண்ட கைதடி கிராமம் ஜூன் மாதம் முதலாந்திகதி முதல் இரு கிராம சேவையாளர் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருவரை நியமிப்பதாக அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. தற்பொழுதுள்ள கிராமசேவகரே இரு பிரிவுகளிலும் கடமையாற்றி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## தேவை

டிஸ்பென்சர்

யாழ்ப்பாணத்திலுள்ள டாக்டரின் மருத்துவ நிலையத்துக்கு டிஸ்பென்சர் ஒருவர் தேவை. தகுதிகளையும் விரும்பும் சம்பளத்தையும் குறிப்பிட்டு 65, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும் தமிழ் ஆங்கில அறிவு அவசியம்- 1048

அனுபவம்வாய்ந்த சினிமா ஒப்பறேற்றர்தேவை. பிணைப் பணம் கட்டக்கூடியவராயிருத்தல் வேண்டும். 28-6-69க்கு முன்னர் மனுச் செய்யவும். அல்லது அத்தாட்சிப் பத்திரங்களுடனும், நன் நடத்தைப் பத்திரங்களுடனும்கீழ்க்காணும் விலாசத்தில் பேட்டி காணவும். ரஞ்சனு தியேட்டர் வல்வெட்டித்துறை. 1203

## அப்பல்லோ-11 சாம்பியன்

உடுப்பிட்டி, திங்கள்

பருத்தித்துறை யுனைட்டெட் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட இரண்டாவது வருடாந்த கிரிக்கெட் மென்பந்து சுற்றுப்போட்டியில் புலோலி அப்பல்லோ-11 விளையாட்டுக்கழகம் சாம்பியன் கேடயத்தைத் தட்டிக்கொண்டது.

சாம்பியன் தெரிவிற்கான இறுதிப்போட்டியில் கடந்த வருடச் சாம்பியன் கோஷ்டியான ஒலிம்பிக்ஸ் கோஷ்டிக்கும் அப்பல்லோ-11 கோஷ்டிக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய அப்பல்லோ-11 கோஷ்டி 89 ஓட்டங்கள் எடுத்துக்கொண்டு தனது ஆட்டத்தை நிறுத்தியது.

இதில் டி.கே.புவல் என்பவர் 32 ஓட்டங்களை எடுத்தார். பின்னர் ஒலிம்பிக் கோஷ்டியினர் 43 ஓட்டங்களை எடுத்தார்கள். இரண்டாம்ஆட்டத்தில் அப்பலோ வீரர்கள் 40 நிமிடங்களில் 63 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தினர். ஒலிம்பிக் கோஷ்டியினர் 45 ஓட்டங்களை எடுத்தனர். இறுதியில் அப்பலோ-11 கோஷ்டி 64 ஓட்டங்களால் வெற்றி ஈட்டியது.

திருவாளர்கள் யோகேஸ்வரன், சின்னத்துரை ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

## மைதானத்துக்கு கோஷ்டிகள் வரவில்லை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினுல் நடாத்தப்படும், உதை பந்தாட்டச்சுற்றுப் போட்டியில், 'பி' பிரிவுகளுக்கிடையில் நேற்று முன்தினம் கோட்டைமைதானத்தில் நடைபெறவிருந்த போட்டிகளுக்கு இரு கோஷ்டிகள் மைதானத்துக்கு வராது விட்டு விட்டன.

யாழ்ப்பாணம் "கிறீன் பீல்ட்" 'பி' பிரிவுக் கோஷ்டிக்கும், "யாழ் றேஞ்சஸ்" விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த போட்டியில், "யாழ் றேஞ்சஸ்" கோஷ்டி குறிப்பிட்ட நேரத்துக்கு மைதானத்துக்கு வராததினுல், கிறீன்பீல்ட் கோஷ்டியினருக்கு வெற்றியென அறிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை "சென் ஜேம்ஸ்" விளையாட்டுக் கழகத்துக்கும், யாழ்ப்பாணம் "வைக்கிங்ஸ்" விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த மற்ருெரு போட்டியில், சென் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்தினர், குறிப்பிட்ட நேரத்துக்கு மைதானத்துக்கு வராததினுல், "வைக்கிங்ஸ்" கோஷ்டியினருக்கு வெற்றியென தெரிவிக்கப்பட்டது.

(தே. நி)

## முதலிடம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டியில் நீல இல்லம் 353 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றது. மஞ்சள் இல்லம் 228 புள்ளிகளையும், பச்சை இல்லம் 194 புள்ளிகளையும், சிவப்பு இல்லம் 181 புள்ளிகளையும் பெற்றன. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கல்லூரியின் பழைய அதிபர் வி. தம்பு பரிசில்களை வழங்கினுர்.

0 0

மட்டுவில், திங்கள்

டிறிபேக் கல்லூரி வருடாந்தமரதன் ஓட்டப்போட்டியில் ஆபிரகாம் இல்லம் புள்ளி விகிதப்படி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. இப்போட்டியில் வெற்றிபெற்ருேர் விபரம் வருமாறு; முதலாம் இடம் எஸ். மகிபாலன், இரண்டாம் இடம் எஸ். பத்மசேனன். 3ம் இடம் ஏ. பரமானந்தம்.

## இன்றைய பலன்

ஆனிமாதம் 10-ம் திகதி

24-6-69

மேஷம்- குறை கேட்க நேரிடும், கடமையில் தடைதோன்றும். நஷ்டத்துக்கிடமுண்டு, நாவடக்கம் நன்று.

ரிஷபம்- உறவு முறைகள் பலப்படும், உற்சாகம் பெருகும் புதிய நண்பர்கள் புடை சூழ்வர், வாழ்த்துமுண்டு.

மிதுனம்- தொழில் துறையில் முன்னேற்றம், தொடர்ந்து வரும் புகழ். நிதியில் அபிவிருத்தி, நிம்மதி பிறக்கும்.

கடகம்- மக்கள் புகழ் பரவும், மனதில் மகிழ்ச்சி தோன்றும். வரவில் திருப்தியுடன் வாழ்வில் சுகமுமுண்டு.

சிம்மம்- கழுகுப் பார்வை வட்டமிடும், காத்திருப்பர் பகைவர், நிதி நெருக்கடியைத் தவிர்க்க மதிவழிநில்.

கன்னி நாள் எல்லாம் அலைச்சல், உடலில் நலிவு தோன்றும் பிணிக்கு இடம்கொடாது சுகாதாரத்தைப் பேணுக.

துலாம்- திடீர் திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும். சிலர் வாகக்கை அதிர்ஷ்டகரமாக அமையும்.

விருச்சிகம்- வெளியிடத்துப் பயணம், வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தால் நன்று.

தனுசு- உறவுகள் பலப்படும், உள்ளத்தில் உவகை, துள்ளும். உயர்வுக்கு வழிபிறக்கும், உவப்பான தினம்.

மகரம்-தெளிந்தமனம், தெய்வசிந்தை, தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்தவாழ்வு முண்டு.

கும்பம்- தூரத்துச் செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும் பிணிக்கு இடங்கொடாது உடல் நலத்தைப் பேணவும்.

மீனம்- இல்லத்தில் இனிமை மலரும், உறவினர்கள் கூடுவர். உல்லாசமான பொழுது போக்கும் உண்டு.

— சோதிடக்கலாநிதி —

திருமலை

## யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மோதல்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினுல்யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே கோட்டை மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'பி' பிரிவுப் போட்டியில் யாழ்ப்பாணம் 'சிங்கிங்பிஷ்' விளையாட்டுக் கழகமும், தெல்லிப்பழை 'கிருஸ்கொப்பஸ்' விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இப்போட்டி ஆரம்பமாகியதும் இரு கோஷ்டியினரும் பாராட்டக்கூடியவிதத்தில் கவர்ச்சியாக விளையாடினர். இப்போட்டிதொடங்கி 20 நிமிடங்களின் பின், 'சிங்கிங்பிஷ்' கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் ருஜன் மிக வேகமாக ஒரு கோலைப் போட்டார். இதன்பின் இக் கோஷ்டியினர் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டுவிட்டனர். இடைவேளையின்போது 'சிங்கிங்பிஷ்' கோஷ்டியினர் 1—0 கோலைப் பெற்றிருந்தனர்.

இடைவேளையின்பின் 'கிருஸ்கொப்பஸ்' கோஷ்டியினர் மிக வேகமாக விளையாட முற்பட்ட போதிலும் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டுவிட்டனர். ஆட்டம் முடிவடைவதற்கு 15 நிமிடங்கள் இருக்கும்போது 'கிருஸ்கொப்பஸ்' கோஷ்டியின் இடதுகரை முன்னணிவீரர் மிக சாதுரியமாக ஒரு கோலைப் போட்டார். இதன்பின் இரு கோஷ்டியினரும் ஆட்டம் முடியும் வரை கோல்கள் எதுவும் போடாமையால் ஆட்டம் சரிசமனுக முடிவுற்றது. இப்போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். (தே. நி.)

## விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை, திங்கள்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்தவிளையாட்டுப்போட்டி இம்மாதம் 27ந் திகதி பிற்பகல் ஆரம்பமாகவிருக்கிறது.

# நாவலரால் பாடப்பட்ட கதிர்காமக்கீர்த்தனங்கள்

உரும்பராய், திங்கள்

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் பாடப்பட்ட கதிர்காமக் கீர்த்தனைகளை உள்ளடக்கிய நூல்ஒன்றுநாவலர் விழாவை முன்னிட்டு வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சக முதல்வர் திரு மு. கணபதிப்பிள்ளையினுல் இலவசமாக வெளியிடப்பட்டிருக்கும் இந்நூலில் கதிரமலை முருகனைப்பற்றி நாவலர் பாடிய ஆறுகீர்த்தனங்களும் அடங்கியுள்ளன.

கதிர்காமக்கந்தன் திருச்சந்நிதியில் இக்கீர்த்தனங்களைப்பாடியவண்ணுர்பண்ணை சி. விநாயகமூர்த்திச் செட்டியாரின் தீராதநோயான இருமலோடுகூடியகாசம் மறைந்தோடிய அற்புதத்தை, இந்நூலின் வரலாறுபற்றிஎழுதியிருக்கும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நன்கு விளக்கியுள்ளார்.

சங்கீத இரஸிகர்களுக்கும் ஏனையோருக்கும் மிகவும்உபயோகமான நாவலர் பெருமானின் கதிர்காமக் கீர்த்தனங்களை இம்மாதம் 27-ந் தேதி யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் தமது இசைக்கச்சேரியில் பாடவிருப்பதாக சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை தெரிவித்திருக்கிறுர்.

## வடமராட்சியில் வரவேற்பு

யாழ்ப்பாணம், செவ்.

நாவலர்சிலை வடமராட்சிப் பகுதி ஊர்வலத்தின் போது இம்மாதம் 26-ம் திகதி மாலை 5-15க்கு கிராமக்கோட்டுச்சந்திக்கும் 5-30க்கு பருத்தித்துறை சிவன் கோவிலுக்கும் 5-53க்குபருத்தித்துறை நகர சபைக்கும் 6-10க்கு விபாபாரிமூலைச் சந்திக்கும் செல்லும்.

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம், செவ்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் தமது கோரிக்கையை முன்வைத்து யாழ்ப்பாணம் முனியப்பர் கோவிலுக்கு முன்னுல் சாகும்வரை உண்ணுவிரதமிருக்க தீர்மானித்துள்ளனர்.

இச்சங்க கூட்டம் யாழ்ப்பாணத்தில் சங்கதலைவர் திரு. க. சதானந்தன் தலைமையில் நடைபெற்றபோது மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. சதானந்தன் பிரதம மந்திரியுடன் சங்க பிரதிநிதிகள் நடத்திய பேச்சுவார்த்தை சம்பந்தப்பட்ட அறிக்கையைப் படித்தார்.

எம். பி. க்கள் அளித்த வாக்குறுதிகளில் நம்பிக்கை இழந்து விட்டதாக கூட்டத்தில் பங்கு பற்றிய அங்கத்தவர்கள் அபிப்பிராயம் வெளியிட்டார்கள். வேலையற்ற பட்டதாரிகள் படும் கஷ்டங்கள் பற்றியும் கூட்டத்தில் விரிவாகக் கூறப்பட்டது.

## மகேஸ்வரபூசை

பருத்தித்துறை, திங்கள்

அந்திரான் முருகமூர்த்தி வருடாந்த ஆனியுத்தர அன்னதானமும் விசேட முப்பூசைகளும் இன்று நடைபெற்றன.

சுழிபுரம், திங்கள்

ஈழத்துச்சித்தர் சுவாமி திருநாவுக்கரசு சித்தங்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற தேர்த் திருவிழாவின்போது அடியார்கள் முன்னிலையில் தமது சிரசின் மேல் தேங்காய் அடித்து உடைத்து பல அற்புதங்களைச்செய்தார்.

# குமாரசாமியை நிறுத்த காங்கிரஸ்கிளை கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

அடுத்த பொதுத் தேர்தலில் சாவகச்சேரிப் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளராக, முன்னுள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசாமியை நிறுத்தும்படி தலைமைப்பீடத்தைக் கோருவதென்ற தீர்மானம் நேற்று முன்தினம் நடந்த சாவகச்சேரி தமிழ்க் காங்கிரஸ் கிளையின் விசேஷ கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

சாவகச்சேரி நகரசபை உபதலைவர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் சாவகச்சேரி நகரபசைத் தலைவர் திரு. சு. கனகரத்தினமும் கலந்து கொண்டார்.

ஜப்பானில் நடந்த நெல் விளைச்சல் ஆராய்ச்சி மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட திரு. வி. குமாரசாமிக்கு சாவகச்சேரியில் வரவேற்பு அளிப்பதென்றும் இவ்வரவேற்புவிழாவுக்கு உணவு மந்திரி திரு. எம். டி பண்டாரவையும், தேசிய சேவை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவையும் அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்

வெள்ளவத்தை, திங்கள்

கொள்ளுப்பிட்டி தேயிலைப்பிரச்சாரச்சபை மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் எட்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-திரு. இ. அந்தோனிப்பிள்ளை. உப தலைவர்-திரு. கு. டே. செல்வராசா. பொதுச் செயலாளர்-திரு. செ. பரராசசிங்கம். துணைச் செயலாளர்-திரு. வே. குமரகுரு. பொருளாளர்-திரு. பொ. கனகலிங்கம். துணைப்பொருளாளர்-திரு. ச. தொ. புவிராசசிங்கம்.

ஆட்சிக்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் க. பேரம்பலம், அ. சிவரத்தினம், வ. நடராசா, த. ஞானேஸ்வரன், சி. சிற்றம்பலம், க. தவராசசிங்கம், சி. திருஞானசோதி, வ. சிவபாலரத்தினம், சி. சின்னத்தம்பி. ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## நபிகள் விரும்பியது

யாழ்ப்பாணம், செவ்.

உலகத்தில் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநிறுத்துவதற்காகப் பாடுபட்டவர்களுள் பெருமானுர் (ஸல்) அவர்களைப் போல் ஒருவரும் கஷ்டத்துக்குள்ளாகவில்லையென்றும் முஸ்லிம் ஒருவன் மற்ருெரு முஸ்லிமைக் கண்ணியப்படுத்த வேண்டும் என்றும் வாழ்வின் சகல அம்சங்களிலும் ஒருவருக்கொருவர் பிரதிபிம்பமாக விளங்க வேண்டும். அதனையே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முஸ்லிம் மற்ருெரு முஸ்லிமுக்கு கண்ணுடி எனக் கூறினுர் என்றும் சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் முஸ்லிம் மாணவர் மஜ்லிஸின் சார்பில் நடைபெற்ற மீலாத்விழாவில் பேசிய பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர் ஜனுப் வை. மஹ்றூப் கூறினுர்.

ஜனுப் எம். அபீபித்தீன் பேசுகையில் பெண்களுக்கு வாழ்வளித்தவர் பெருமானுர் (ஸல்) அவர்கள் என்ருர்.

மஜ்லிஸின் தலைவர் ஜனுப் எம். சபூர்தீன் தலைமையில் விழா நடைபெற்றது. ஸலவாத்துடன் விழா முடிவுற்றது.

## 'ஈழநாடு' செய்திதலைப்புப்போட்டி (9)

சென்ற வாரம் நாம் கொடுத்திருந்த கற்பனைச் செய்திக்கு நேயர்கள் அனுப்பிய ஏராளமான தலைப்புகளையும் பரிசீலனை செய்து பின்வரும் விடையே மிகச் சிறந்ததென போட்டிக்குழு தீர்மானித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிலையும் காய்கறியும்

ஈட்டியது.

திருவாளர்கள் யோகேஸ்வரன், சின்னத்துரை ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

டது. இப்போட்டியில் வெற்றிபெற்ருேர் விபரம் வருமாறு; முதலாம் இடம் எஸ். மகிபாலன், இரண்டாம் இடம் எஸ். பத்மசேனன். 3 ம் இடம் ஏ. பரமானந்தம்.


வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]

* சிவாஜி
* பத்மினி
நடித்த

திருமால் பெருமை

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த

உயிரா மானமா

மகத்தான 4-வது வாரம்

இங்ஸ்லி
(கொழும்பு)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)



ஜெய்சங்கர்
★
ஜெயலலிதா
★
நாகேஷ்
★
குமாரி சச்சு
★
சோ, மனேரமா
(சொந்தக் குரலில் பாடி) நடித்த

நகைச்சுவைச் சித்திரம்

பொம்மலாட்டம்

கெப்பிட்டல்
(கொழும்பு)

பிளாஸா
(வெள்ளவத்தை)

ராஜ்
(நீர்கொழும்பு)

ஸ்ரீ கிருஷ்ணு
(திருமலை)

ஆகிய திரைகளில் திரையிடப்படுகின்றது.
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
சிவாஜி, கே. ஆர். விஜயா
முத்துராமன், கிதாஞ்சலி, பாண்டியன்
நடித்த

நெஞ்சிருக்கும் வரை


வினர்கள் கூடுவர். உல்லாசமான பொழுதுபோக்கும் உண்டு.

— சோதிடக்கலாநிதி —

திருமலை
க. வேலுப்பிள்ளை

## சுகாதார விழா

அல்லைப்பிட்டி, திங்கள் ஊர்காவற்றுறை கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் பாடசாலையில் ஊர்காவற்றுறைப் பட்டினசபைத்தலைவர் திரு. எஸ். இம்மானுவல் தலைமையில் சுகாதாரவிழா கொண்டாடப் பட்டது. ஊர்காவற்றுறைப் பாடசாலைகளுக்கிடையே இயல், இசை, நடன, நாடகப் போட்டிகள் நடைபெற்றன. இப் போட்டியில் கலந்து கொண்ட சகல பாடசாலைகளுக்கும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை உதவி வைத்தியர் திருமதி. செங்கமலம் தெய்வேந்திரம் பரிசில்கள் வழங்கினர்.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45.
தேவகுமார் - மாலசிங்க
நடித்த
மேரேலால்
(ஹிந்தி)
(கொழும்பில் 200 நாட்களுக்கு மேல் ஓடியபடம்.

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் — ஜெயலலிதா
நடித்த
நான்
(ஈஸ்ட்மென் கலர்)

MANOHARA
JAFFNA
Daily 4 Shows
YUL BRYNNER as the
Double Man
The Best Thriller - 1968

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Pre-Poya, Poya 4 Shows
Jean-Paul Belmondo
Ursula Andress
in
CHINESE ADVENTURES
IN CHINA


சென்ற வாரம் நாம் கொடுத்திருந்த கற்பனைச் செய்திக்கு நேயர்கள் அனுப்பிய ஏராளமான தலைப்புகளையும் பரிசிலனை செய்து பின்வரும் விடையே மிகச் சிறந்ததென போட்டிக்குழு தீர்மானித்தது.

### பரிசு பெறும் விடை

## 'கல்விக் கழகம் கட்டிய கமக்காரர்'

எழுதியவர்:- சுந்தரவல்லி சதாசிவம், டச்ரோட், உடுவில், சுன்னுகம்.

### பாராட்டுக்குரிய விடைகள்

'கங்காபுத்திரன் மங்காத சாதனை' (செ. சூசையா, குருநகர்), 'ஏர் பிடிப்போர் ஏடு பிடிக்க தீர்மானித்தனர்' (சு. ரதிவதனி, சித்தன்கேணி), 'கங்காபுரம் கண்ட கனவு' (அ. இரத்தினமலர், கச்சேரி வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்), 'விவசாயத்தின் வளர்ச்சியும் கல்வியின் உயர்ச்சியும்' (நா. புவனேஸ்வரி, நீர்வேலி மத்தி.)

### இந்த வாரப் போட்டி

பின்வரும் கற்பனைச் செய்திக்கு பொருத்தமான, அழகிய சுருக்கமான ஒரு தலைப்பு கொடுக்க வேண்டும்.

'திருக்கோணமலை பகுதியிலுள்ள ஒரு காட்டில் ஓங்கி வளர்ந்த குன்று காணப்படுகிறது. அதன் உச்சியிலே பத்தாண்டுகளுக்கு ஒரு முறை பழுக்கும் கரு நெல்லி மரம் இருப்பதாக இலங்கை தாவரவியல் சங்கத்தின் தலைவர் திரு. தாமோதரம் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளார். இச்சிறு மரம் வருகிற 1972-ம் ஆண்டில் ஒரே ஒரு கனியைப் பெற்றெடுக்கும் என்று அவர் நம்புகிருர். கருநெல்லிப் பழத்தை உண்பவர்கள் பல நூற்ருண்டுகள் வாழ்வார்கள் என்று தமிழிலக்கியம் கூறுகிறது. எனவே அம்மரத்தைச் சுற்றிப் பெரும் காவல் வேலைகள் நடக்கின்றன. மரம் சேதமுருதபடி தீவிர முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அதில் பழுக்கும் கனி யாருக்குச் சொந்தமாகும் என்பதுபற்றி அரசாங்கம் ஆலோசனை நடத்தி வருகிறது.

### நிபந்தனைகள்:

விடைகளைக் கீழ்க்காணும் கூப்பனிலேயே தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். விடைகள் யாவும் 28-6-69 க்கு முன் எமக்கு வந்து சேரவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் எழுதி ஒரே உறையில் வைத்து அனுப்பலாம். அனுப்பவேண்டிய விலாசம்: **செய்தித் தலைப்புப் போட்டி (9), 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்,** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக் கொள்ளவேண்டாம். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது. மிகச் சிறந்த விடைக்கு ரூபா ஐந்து (5/-) பரிசுப்பணமாக வழங்கப்படும்.

'ஈழநாடு'

செய்தித்தலைப்புப் போட்டி-(9)

விடை: ...........................................

...........................................

பெயர் : ...........................................

விலாசம் : ...........................................

...........................................


புகையிலையும் காய்கறியும்
பயிரிடும் கமக்காரரே !

பொஸ்றின்

அழுக்கணவனையும் மற்றெல்லாக் கிருமிப்பீடைகளையும் ஒழிக்கவல்லது.

உடனே செயலாற்றும் சக்தி வாய்ந்த இந்த ரசாயனப்பொருளை அறுவடைக்கு முதல்நாள் வரை தெளிக்கலாம்.




ஷெல் ரசாயனப் பொருட்கள்
பாவித்து அதிக உணவு பயிரிடுக

ஷெல் ரசாயனப் பொருட்கள்
SHELL

ரசாயனபபொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள 'அலறெக்ஸ்', 'டீல்றெக்ஸ்' 20, 'டீல்றெக்ஸ் எக்ஸ்டரா', 'ஆர்கொடீன்', 'என்றெக்ஸ்' 20, 'பிட்றின்', 'மலதியன்', 'சுமத்தியன்', ஷெல் களைப்புற்கொல்லி 'எம் 50', 'ஸ்டாம்' எப-34, 'கிறமவின்', ஷெல் பீ. எச். சி 10% தூள் இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட்களில் சில மாத்திரமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரணாசி ரயில்விபத்து நாசவேலையாம்

புதுடில்லி, ஜூன் 23

வாரணாசி அருகில் சனியன்று ஏற்பட்ட விபத்துக்கு அப்பகுதியிலுள்ள பழங்குடி மக்களில் சிலர்தான் காரணமாக இருந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகின்றது.

அலகபாத்— கோரக்பூர் எக்ஸ்பிரஸ் தடம்புரண்டதில் சுமார் 81 பேர் மரணமாகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. 141 பேர் காயமடைந்தார்கள்.

விபத்தில் மாண்டவர்களில் ரயில் டிரைவா, பான ர்ஜி' பயர்மன் ஃபி'டர் ஆகிய மூன்று ஊழியர்களும் உள்ளனர்.

ரயில் டிரைவர் மரணமாவதற்கு சற்றுமுன் ரயில் பாதையில் நாம் ஒருவரைப் பார்த்ததாகவும் ரயில் வேகமாக ஓடிக்கொண்டிருந்ததால் ரயிலை நிறுத்த மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லையென்றும் வாக்குமூலத்தில் கூறினார்.

இந்த விபத்துக்கு நாசவேலையே காரணமாக இருந்திருக்கக் கூடும் என்று நிச்சயமாக நம்பப்படுகின்றது.

பாலமொன்றில்ரயில் பாதையின் வலது பக்கத்தில் பிற்பிளேட்டுகள் அகற்றப்பட்டிருந்தன என்றும் விபத்து நடந்த இடத்துக்கு அருகில் கிடந்த பிற் பிளேட்டுகளும் ஆணிகளும் கைப்பற்றப் பட்டுள்ளன வென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துப்பற்றி ஸ்தலத்தில் தீவிர புலன் விசாரணை நடைபெறுகின்றது.

# பிரபஞ்சத்தின் பூர்வீகம்: தமிழ் விஞ்ஞானி ஆராய்கிறார்

## பிரிட்டிஷ் பத்திரிகை தகவல்

லண்டன், ஜூன் 23

பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றி முக்கிய தகவல்களை அளிக்கக்கூடிய பரிசோதனைகளில் இந்திய விஞ்ஞானியான பேராசிரியர் கந்தையா சிவானந்தன் கொண்டுள்ள முக்கிய பங்கு பற்றி பிரிட்டிஷ் "நியூசயின்டிஸ்ட்" சஞ்சிகையில் குறிப்பு வெளியாகியுள்ளது.

அப்பேராசிரியர் அமெரிக்க கடற்படை ஆராய்ச்சிக் கூடத்தில் பணியாற்றுவதாகவும், நிறமாலையில் சிவப்புக்கு மிகக்கீழாக உள்ள அலைநீளத்தில் வான் ஆய்வுகளை நடத்துவதில் அவர் தனிக்கவனம் செலுத்தி வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சமீபமாதங்களாக பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய முக்கிய சர்ச்சை ஒன்றில் ஈடுபட்டுள்ள கோஷ்டியில் பேராசிரியர் சிவானந்தனும் ஒருவர். மற்ற அலைநீளங்கள் மூலமான ஆராய்வுகள், ஆதியில் பிரபஞ்சம் பெரும் வெடிப்பிலிருந்து தோன்றியது என்று கூறும் கொள்கை சரிஎன்று கொள்வதானல் ஆதி வெடிப்பில் மிஞ்சிய 'கருப்புபபொருள்' வெப்பம் இருப்பதாகக் காட்டுகின்றது.

மற்றதுறைகளிலான ஆராய்ச்சி 'வெடிப்புககொள்கை' யைமறுக்கும் வகையிலான தகவல்களை அளிப்பதாக அச்சஞ்சிகை சுட்டிக்காட்டிவிட்டுக் கூறுகையில் இவ்வாண்டின் பிற்பகுதியில் பேராசிரியர் சிவானந்தனும் அவருடைய சில சகாக்களும் நடத்தப்போகும் பரிசோதனை ஒன்றைக் குறிப்பிட்டுள்ளது. அவர்கள் விசேஷ ராக்கெட்டில் ஒரு சாதனத்தைவைத்து வானுக்கு அனுப்பப் போகின்றனர் அதுமேற்படி சர்ச்சையைத் தீர்க்கப் பெரிதும் உதவலாம்.

அமெரிக்காவில்தான் ஆராய்ச்சி வேலைநடத்துவது பற்றி அப்பேராசிரியர் குறிப்பிடுகையில் ,,சொல்லப்போனல் ஒருபரிசோதனைக்கு 5 லட்சம் டாலர்பணம் வேறு எந்த நாட்டில்கிடைக்கப்போகிறது'' என்று சொன்னதாக அப்பத்திரிகை எழுதியுள்ளது.

# தமிழ் நாடு அமைச்சர் மாறுவேடத்தில் போனர்

## அவரிடமேலஞ்சம்கேட்டாராம்அதிகாரி

ஹோசூர், ஜூன்23 அந்த ஊழியர் மீண்டும் வற்

## இரு புதிய கடதாசி ஆலைகள்

கோட்டை, திங்கள்

மேலும் இரு கடதாசி உற்பத்தி ஆலைகளை நிறுவுவதற்கு கிழக்கிலங்கை கடதாசிக் கூட்டுஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

அனுராதபுரம், குருநாகல் ஆகிய இரு பகுதிகளிலும் கடதாசி உற்பத்திக்கு வேண்டிய பிரதானமான மூலப் பொருளாகிய வைக்கோல் உள்ளதால் இவ்விரு இடங்களிலும் இரு தொழிற்சாலைகளை நிறுவுவதெனப் பிரஸ்தாப கூட்டுஸ்தாபனம் உத்தேசித்துள்ளது.

இந்த இரு தொழிற்சாலைகளும் பூர்த்தியாதி மூன்று ஆலைகளும் ஒன்ருக இயங்கினல் ரூபா 10,000,000 அன்னிய செலாவணி மீதப்படுத்தப் படுவதோடு 200 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

## 3 இளைஞருக்கு மரண தண்டனை

காலி, திங்கள்

காலியில் நடைபெற்று வரும் தென் பகுதிக்கான அசைஸ் விசாரணையின் போது மூன்று இளைஞர்களுக்கு நீதியரசர் திரு. ஓ. எல். கிறேஸ்டர் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இவ் வழக்கில் ரி. வி. அமரதாசா, எல் என். ஜி ருேமியல் அலெயஸ் சோமதாசா, பி. ஜி. உபதிஸ ஆகிய மூவரும் ரி. வி. சந்திரதாஸா என்பவரை அவர் தஞ்சம் புகுந்த இகலகீம்பியா கிராம சேவகரின் வீட்டில் வைத்துக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. குற்றவாளிகள் மூவரும் கொலை செய்யப்பட்டவரது நெருங்கிய உறவினராவர்.

## தமிழ் நாட்டில் நக்சல்பாரி இயக்கம்

மதுரை, ஜூன். 23

தமிழ் நாட்டில் நக்சல்பாரிகளின் நடவடிக்கைகள் குறித்து பொலிஸார் தீவிரமாகக்கண்காணித்துவருவதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மகாதேவன் மதுரையில் கூறினர்

மதுரை ஜில்லாவிலும், வர்ஷ நாடு மலைகளிலும் சுமார் ஒரு டஜன் பொலிஸ் ஸ்டேஷன்களுக்கு தாம் விஜயம் செய்ததாக அவர் கூறினர். இவை கேரள எல்லை அருகில் உள்ளன.

வரட்சி காரணமாக குற்றங்கள் அதிகரிப்பதாக தாம் கருதவில்லை என்று அவர் கூறினர். குற்றங்களை கண்டு பிடிப்பது சம்பந்தமாக இந்த வருடமும் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகிக்கும் என்று கூறுவதற்குதாம் பெருமை அடைவதாக அவர் தெரிவித்தார்.

தேனி துப்பாக்கிச்சூடு சம்பவம் பற்றி ஐ. ஜி. குறிப்பிட்டார். சென்னையில் ரசாயன பரிசோதனைக்குப் பிறகு இறந்தவரின் பிரேத விசாரணை பற்

## புதிய சிந்தனையை ஏற்படுத்தவேண்டும்

யாழ்ப்பாணம், செவ்.

கடல் தொழிலாளலர்கள் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். கடல்தொழிலாளர்களையும் கடல் தொழிலையும் புறக்கணித்து வரும் அரசாங்க இலாகாவினருக்கு இது பற்றி புதிய சிந்தனையை ஏற்படுத்த வேண்டுமென பாஷையூர் கடற்ருெழிலாளர் சங்கம் தமக்களித்த சேவை நலம் பாராட்டு விழாவில் பேசிய முன்னாள் தலைவர் திரு. ச. ஸ்ரனிஸ்லோஸ் பேசுகை

# 'நாவலரின் ஆசிரியர் கோப்பாயை சேர்ந்தவர்'

கோப்பாய், திங்கள்

கோப்பாய் நாவலர் இந்து தமிழ்க்கலவன் பாடசாலைப் பழைய மாணவர்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சென்ற 20ம்திகதி மாலை மேற்படி பாடசாலை மண்டபத்தில் தலைமையாசிரியர் திரு. மு. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது முன்னுரையில் பாடசாலை வளர்ச்சியில் பழைய மாணவர் யாவரும் ஒருமனதோடு பங்குகொள்ள வேண்டுமென்றும் நாவலர் சிலை வரவேற்பிலும் இயன்ற உதவி புரிய வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்.

செயலாளர் திரு. க. சதானந்தன் தமது அறிக்கையில் பாடசாலை வளர்ச்சியிலும் பாடசாலைப் புதுக்கட்டிடத்தை அரசாங்கம் பொறுப்பேற்கும் விஷயத்திலும் சங்கம் கல்வி அமைச்சுடனும் அதிகாரிகளுடனும் வேண்டிய தொடர்புகள் கொண்டதாகவும் இப்பாடசாலையில் நீண்டகாலம் சேவையாற்றி நல்வழி காட்டிய தலைமையாசிரியர் திரு. மு. வேலாயுதம்பிள்ளை பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயர் ஆகியோரின் சேவையைப் பாராட்டும் விழாக்கள் நடாத்தி நன்றியைத் தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவில் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி ஆகியோர் போஷகர்களாகவும் தலைவராக திரு. வ. முத்துக்குமாரசாமியும் உபதலைவராகத் திரு. பொ. தி. சம்பந்தரும் காரியதரிசியாக திரு. க. சதானந்தனும் உபகாரியதரிசியாக திரு. கை. வேலாயுதபிள்ளையும் தனதிகாரியாக திரு. ஆ. தம்புவும் தெரிவு செய்யப்பட்டனர். பதினெருபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவச்சிலையை இப்பாடசாலையில் வரவேற்பது பற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இது சம்பந்தமாக வலிகிழக்குக் காரியாதிகாரியால் கூட்டப்பட்ட கூட்டத்தில் தீர்மானங்களையும் எடுத்த நட்வடிக்கைகளையும் பற்றி தலைவர் திரு. அ. பொன்னம்பலம், திருவா பொ. தி. ாம்பந்தர் ஆகியோர் குறிப்பிட்டனர். உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கிராமசேவகர் திரு. சி ஆறுமுகம் விளக்கினர்.

திரு வ. முத்துக்குமாரசுவாமி பேசும்போது ஆறுமுகநாவலர் கோப்பயுடன் நெருங்கிய தொடர்புடையவர். அவருடைய ஆசிரியரும் கோப்பாய் பகுதியைச் சேர்ந்தவர்.' நாவலர் கால்பட்ட மண்டபம் இது. அவராலேயே பாடசாலை ஒன்றும் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. அப்படிப்பட்ட பெருமைக்குரியவர்கள் நாங்கள் ஆகவே எல்லோரும் கூடுதலான உதவி புரிந்து நாவலரின் உருவச்சிலையை மற்றைய இடங்களிலும் பார்க்கச் சிறப்பான முறையில் வரவேற்கவேண்டிய கடமைப்பாடு எங்களுக்குண்டு. இச்சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம் என்று எல்லோரும் கருதிச் செயற்படவேண்டும் என வேண்டிக்கொண்டார்.

18.6.69ல் பெற்ருேர், பழைய மாணவர் பிரமுகர்கள் யாவரையும் அழைத்து நடாத்திய கூட்டத்தில் வரவேற்புச் சம்பந்தமாகச் செய்த முடிவுகளையும் வரவேற்பைக் கவனிக்க தெரிவு செய்யப்பட்ட குழுவையும் பழையமாணவர் சங்கமும் ஏற்றுக்கொண்டது. அக்குழுவில் தலைமையாசிரியர், கிராமச்சங்க உறுப்பினர் திரு. பொ. தி. சம்பந்தர், சனசமூகநிலையத்தின் பொருளாளரும் பழையமாணவர் சங்கத்தின் காரியதரிசியுமான திரு. க. சதானந்தன் பெற்ருர் ஆசிரியர் சங்கக் காரியதரிசி க. முத்தையா ஆசிரியர் அ. சுப்பிரமணியம், திரு எஸ். கே. சுப்பிரமணியம் கிராமசேவகர் சி. ஆறுமுகம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். ஆசிரியர் திரு. அ. பொன்னம்பலம் இக்குழுவின் பொறுப்பாளராக இருப்பார்.

# 'கி.ச.உறுப்பினர்களை தலைவர் அலட்சியம் செய்துவிட்டார்'

## உடுப்பிட்டி கி.சபைக்குவரும்பிரேரணை

நாவலர் சிலை பவனி

# வடமராட்சியில் வரவேற்பு நிகழ்ச்சி விபரம்

உடுப்பிட்டி, திங்கள்

கொழும்பிலிருந்து யாழ். நகர் வந்துகொண்டிருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலைப்பவனி எதிர்வரும் 26-ம் திகதி வடமராட்சியை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வடமராட்சியின் நுழைவாயிலான யார்க்கருவில் வைத்து நாவலர் சிலை முதலில் கரவெட்டி கிழக்குப் பொது மக்களால் வரவேற்றுக் கௌரவிக்கப்படும்.

இந்நாவலர்சிலை பவனிவரவேற்பு விழா ஆட்சிமன்ற உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில்நடைபெறும். அன்றைய தினம் பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகும்இவ்வரவேற்பு விழாவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரான்ஸிஸ் பீட்டர், வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன், ஆகியோரும் இந்துப் பிரமுகர்களும் கலந்துகொள்வர்.

திருமதி சோமசுந்தரத்தின் இன்னிசைக் கச்சேரியும், கோண்டாவில் திரு. வீ. ஏ. பாலகிருஷ்ணன் கோஷ்டி, கானமூர்த்தி பஞ்சமூர்த்தி கோஷ்டியினரின் தவில் கச்சேரியும் இடம்பெறும்.

வடமராட்சியில் நாவலர் சிலை பவனிக்கு விரிவான ஏற்பாடுகளை வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் செய்துள்ளார். நாவலர் சபைப் பிரதிநிதி திரு. அட்சரமூர்த்தி ஊர்வல நிகழ்ச்சி விபரங்களை ஒழுங்குபடுத்தியுள்ளார், திருத்தியமைக்கப்பட்ட வடமராட்சி நாவலர் சிலைப் பவனி அட்டவணை விபரம் வருமாறு:

மாலை 3-30 மணி யார்க்கரு, 3-45 துன்னலை, 4-00 நெல்லியடி, 4-30 வதிரிச் சந்தி, 4-50 மாலிசந்தி, 5-00 மந்திகை, 5-15 கிராமக்கோட்டுச் சந்தி, 5-30 பருத்தித்துறை சிவன் கோவில், 5-55 பருத்தித்துறை நகரசபை, 6-10 வியாபாரிமூலைச் சந்தி, 6-30 பொலிகண்டிச் சந்தி. 7-00நவிண்டில் சந்தி, 7-15 உடுப்பிட்டிச் சந்தி, 7-30 வல்வெட்டித்துறை, இரவு 8-15தொண்டமானுற்றுச் சந்தி, 8-30 செல்வச்சந்நிதி கோவிலில் நாவலர் சிலை இரவு தங்கி மறுநாள் பவனி தொடரும் அன்றிரவு கலை நிகழ்ச்சிகளும்இடம்பெறும்.

# கிளிநொச்சி தீ விபத்து நிதி உதவி

கிளிநொச்சி தீ விபத்து நிவாரண நிதி உதவியோர் பட்டியல்:

ஆ சி முருகேசு ரூபா 100 வழங்கியுள்ளார்.

**ரூ. 25 வழங்கியோர்**

வே செல்லையா, எம் கந்தையா, கே எம் கே நைனு மொகமட், ஏ சி ஆர் எஸ் அன் கோ.

**ரூ. 10 வழங்கியோர்**

ச சுப்பிரமணியம்' ச வடிவேல், மூர்த்தி ஸ்ரோர்ஸ், பரந்தன் பாமெசி, இரத்தினம் சகோதரர்கள், என் பரராஜசிங்கம், க கணசா ஸ்ரோஸ், முருகன்ஸ்ரோஸ், பி வேலுப்பிள்ளை, எம் சிவசம்பு, ஈஸ்வர என்றபிறைஸ், உபகாரம்.

**ரூ. 5 வழங்கியோர்**

சிவம் ஸ்ரோஸ், வே அம்பலவாணர், வே இராசகுலேந்திரன், அ செல்வராசா, ஆறுமுகம் சகோதரர்கள், விஜயலட்சுமி கபே, ராஜா மில்க் பார், முருகானந்தா ஸ்ரோர்ஸ், எஸ் முருகேசு, க கிருஷ்ண பிள்ளை, எஸ் பி முத்துராசா, சி கனகரத்தினம், பி கிருஷ்ணசாமி. இம்பீரியல் அச்சகம், எம் கே மயில்வாகனம், வே சுப்பிரமணியம்.

# 'பிறகட்சிகளுடன் ஒத்துழைக்க தமிழ்க்காங்கிரஸ் தயார்'

— உப சபாநாயகர்

உடுப்பிட்டி, திங்கள்

இன்று தமிழினம் அபாயமான எதிர்காலத்தை நோக்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களிடையே ஒற்றுமையும் விழிப்புணர்ச்சியும் இல்லாமையே நாம் பின்தங்கிய நிலையில் சென்று

அகஸ்தீன், திரு. செல்லையா உட்பட வேறுபலரும் பேசினர்.

## கந்தபுராண விரிவுரை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாறுவேடத்தில் போனர்

## அவரிடமேலஞ்சம்கேட்டாராம்அதிகாரி

ஹோசூர், ஜூன்23

ஹோசூர் தாலுகாவில் உள்ளமூன்றுசோதனைச்சாவடிகளில் (செக் போஸ்ட்)மந்திரி ப. உ. ஷண்முகம் மாறுவேடத்தில் சென்று திடீர் சோதனைகள் நடத்தினர். இந்த சோதனைச் சாவடிகள் தமிழ்நாடு-மைசூர் எல்லையில் உள்ளன.

பொம்மண்டபள்ளி சோதமுகம் சாவடிக்கு மந்திரி ஷண்முகம் புதன்கிழமை இரவு சென்றபோது,மந்திரியிடம் அங்கிருந்த ஊழியர் ரூ 50 லஞ்சம் கேட்டாராம்.

புதன்கிழமை இரவு பத்து மணிக்குமேல் மந்திரிஷண்முகம் ஹோசூர் டெபுடி பொலிஸ் சுப்பிரின்டன்ட் ராமையன், ஹோசூர் கால்நடை பண்ணை சுப்ரின்டன்ட் சேதுராமன் மந்திரியின் உதவியாளர் ஆகியோர் ஒரு காரில்மாறுவேடத்தில்சென்றனர்.

முதலாவதாக அவர் ஓசூர் அருகேஉள்ள பொம்மண்டபள்ளி சாவடிக்குச் சென்றபோது,அதன்அருகேஅமைக்கப்படிருந்த கேட் மூடப்பட்டிருந்தது.எனவே காரை நிறுத்தினர்கள். அங்கிருந்த ஊழியர்ஒருவரை 'கேற்றை' திறந்துவிடும்படி மந்திரியின் காரில் இருந்த ஒருவர் கேட்டபோது காரை சோதனையிடாமல் போக அனுமதிக்க ரூ.50 தரவேண்டுமெனக் கோரினராம். மந்திரியின் உதவியாளர் ரூ.30 கொடுத்தார். ரூ. 50 தருவது மாமூல்; ரூ.30 வேண்டாம்; ரூ. 50 கொடுங்கள் என்று அந்த ஊழியர் மீண்டும் வற்புறுத்தினராம். உடனேசண்முகம், காரிலிருந்து இறங்கி வந்து, தாம் மந்திரி என்பதை வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

பின்னர் சோதனை சாவடியில் இருந்த புத்தகத்தில் மந்திரி புகார் எழுதி வைத்தார்.

ஹோசூர் சோதனை சாவடிக்கு மந்திரி சென்றபோது, அங்கிருந்த 10 விற்பனை வரி இலாகா ஊழியர்களும் கார்கள், லொறிகளை சோதனையிடாமல்உட்கார்ந்துகொண்டிருந்தனராம். அங்கிருந்த பியூன் காரைச் சோதனையிடாமல் போக அனுமதிக்க ரூ.30 வேண்டுமென கேட்டதாகக் கூறப்படுகிறது.

பகளூர் சோதனைச் சாவடிக்கு மந்திரி மாறுவேடத்தில் போனபோது 'டியூட்டி' உள்ள டெபுடிதாசில்தார் அப்போது அங்குகாணும். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தூங்கிக்கொண்டிருந்தாராம். சம்பந்தப்பட்ட சோதனைசாவடி ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தருமபுரி கலெக்டருக்கு மந்திரி உத்தரவிட்டார்.

பொம்மண்டபள்ளி சோதனை சாவடியைசேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பியூன் ரெவின்யூ இன்ஸ்பெக்டர், ஆகியோர் சஸ்பென்ட் செய்யப்பட்டுள்ளனர். மற்றசோதனை சாவடி ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# 'திருவாசக ஒலி உள்ளத்துக்கு அருமருந்து'

யாழ்ப்பாணம், செவ்.

சைவம் தழைக்க தமிழ்த்தாய் ஒப்புயர்வற்று விளங்க அவதாரம் செய்த மாணிக்கவாசகப் பெருமான் தேனினும் இனிய பக்திச்சுவை நனி சொட்டும் திருவாசகத்தைத் தந்தருளினர். சிவபிரான் மீது பாடப்பட்ட திருவாசகம், திருக்கோவையார் பாடல்களைச் சிவபிரானே எழுதி அருளினர். இதனல் மாணிக்கவாசகர் சிறப்பிலும் அவர் பாடல்களில் உள்ள சிறப்பே அதிமதுரத் தேன்போன்ற பக்திச் சுவையை ஊட்டி உய்யும் வழி காட்டவல்லது என்பதை அறியலாம், எனவே திருவாசக ஒலிசைவ இல்லங்கள் தோறும் காலையும் மாலையும் ஒலிக்கவேண்டும். அவை நமது உள்ளத்தை இறைவன் பால் சேர்க்க வல்ல அருமருந்தாகும். திருவாசகத்தை உள்ளம் உருக பயபக்தியுடன் பாடி இறைவனின் திருவருளைப் பெற முயல வேண்டும். திருவாசகம் என்னும் தேன் எம்மை மகிழ்வித்து இறைவன் பால் வழிப்படுத்தும் துன்பத்தை நீக்கும் சக்தி இத்திருவாசகத்துக்கும் உண்டு. திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்குமே உருகமாட்டார்கள்.

என்று பண்டிதர் திரு. மா. குமாரசாமி திருவாசகமென்னும் தேன்'' என்ற பொருள்பற்றி குரும்பசிட்டி சன்மார்க்க சபையில்சென்ற 20-ம் திகதி இரவு நடந்த மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை விழாவில் பேசும் போது குறிப்பிட்டார்.

தலைமைதாங்கிய இரசிகமணி கனக செந்திநாதன் தமது தலைமைஉரையில் திருவாசகம் தெய்வீக நெறியில் ஆற்றுப்படுத்தும் பக்தி இலக்கியம் என்றும் சைவ இலக்கியங்களில் அன்பின் உயர்வை பக்தியின் சிறப்பை சிவபிரானின் திருவருட்சக்தியை நமக்கு உணரவைக்கக் கூடிய அதி அற்புதச் செல்வம் என்றும் குறிப்பிட்டார.

கூட்டுப்பிரார்த்தனை தீபாராதனை நடைபெற்ற பின் பிரசாதம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

---

வித்தார்.

தேனி துப்பாக்கிச்சூடு சம்பவம் பற்றி ஐ. ஜி. குறிப்பிட்டார். சென்னையில் ரசாயன பரிசோதனைக்குப் பிறகு இறந்தவரின் பிரேத விசாரணை பற்றிய முடிவுகள் தெரிய வரும் என்று அவர் கூறினர்.

சமீபத்தில் சாத்தூர் அருகில் நடந்த கொள்ளை பற்றி தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டிருப்பதாக அவர் கூறினர்.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

சண்டிலிப்பாய் ஹொலிவூட் விளையாட்டுக் கழகத்துக்கும் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் சென்ற 18-ம் திகதி நடைபெற்ற தாச்சிப் போட்டி முடிவதற்கு அதிக நேரமிருந்த போதிலும் பார்வையாளர்கள் ஏற்படுத்திய அமைதியின்மையால் விளையாட்டு தொடர்ந்து நடத்த முடியாது இன்னெரு நாளுக்கு ஒத்திவைக்கப் பட்டதாக சுதுமலை கிராம முன்னேற்ற சங்க செயலாளர் அறிவிக்கிருர்.

'சண்டிலிப்பாய் வெற்றி' என்ற தலைப்பில் சென்ற 21-ம் திகதி செய்தியில் சண்டிலிப்பாய் ஹொலிவூட் 9-5 புள்ளிகளால் வெற்றி பெற்றது என வெளியாகியிருந்தது.

## நாய்களை கணக்கெடுக்க நடவடிக்கை

புத்தளம் திங்கள்

புத்தளம்நகரசபைவிசேஷ ஆணையாளர் வீடு வீடாகச் சென்று நாய்களைக் கணக்கெடுக்கும்படியும் வரிகள் அறவிடும்படியும் கட்டளை பிறப்பித்துள்ளார்.

---

சிந்தனையை ஏற்படுத்த வேண்டுமென பாஷையூர் கடற்ருெழிலாளர் சங்கம் தமக்களித்த சேவை நலம் பாராட்டு விழாவில் பேசிய முன்னுள் தலைவர் திரு. ச. ஸ்ரனிஸ்லோஸ் பேசுகையில் கூறினர். தலைவர் திரு ஏ. போல்ராஜ் உட்படபலர் உரையாற்றினர். திரு. அ. இராயப்பு நன்றி தெரிவித்தார்.

## 200 புதிய நூல் நிலையங்கள்

கோட்டை, திங்கள்

கல்வி நூற்ருண்டு விழாவை யொட்டி நாடு பூராவும் கல்வி கலாச்சார அமைச்சினுல் 200 நூல் நிலையங்கள் நிறுவப்படவிருக்கின்றன. இந்நூல் நிலையங்களை நிறுவுவதற்குத் தேவையான பணம் பெற்ருேர்கள் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்ருல் பணமாகவும் கட்டிடப் பொருள்களாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

## கைப்பணிப் பொருட்காட்சி

உரும்பராய், செவ்.

இலங்கை கல்வி நூற்ருண்டுவிழாவையும்தேசியத் தமிழ்தினத்தையும் முன்னிட்டு மிகவும் சிறந்த முறையில் பொருட்காட்சி ஒன்று சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாசாலை உப அதிபர் திருமதி தங்கமணி இராமுப்பிள்ளையும், கைபபணி ஆசிரியை திருமதி தங்கரத்தினம் வெற்றிவேலுவும் சைவசமயாசார முறைப்படி குத்துவிளக்கேற்றி பொருட்காட்சியை ஆரம்பித்துவைத்தனர்,

எண்ணூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கண்டுகளித்த இவ்விழாவில் விசேட பார்வையாளராகக் கலந்துகொண்ட வித்தியாசாலை அதிபர் திரு. சு. குமாரசேகரம் பொருட்காட்சி ஒழுங்கில் ஈடுபட்டவர்களுக்குத் தமது பாராட்டைத் தெரிவித்துக்கொண்டார்.

ஒரே புகையிலையைக் கிழிக்காது. பத்துச் சுருட்டுக்களைச் சுருட்டி, அப்படியே அதே புகையிலைக் காம்பில் தொங்கவிடப்பட்ட காட்சி மிகவும் சிறப்பமைந்திருந்தது.

# 'கி.ச.உறுப்பினர்களை தலைவர் அலட்சியம் செய்துவிட்டார்'

## உடுப்பிட்டி கி.சபைக்குவரும்பிரேரணை

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டிக் கிராமசபையின் புதிய அலுவலகக் கட்டிடத் திறப்புவிழாவின் போது கிராமசபை உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டதாகச் சபையின் 10-ம் வட்டார உறுப்பினரான திரு. சி. ஈஸ்வரலிங்கப்பெருமாள் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுசம்பந்தமாக எதிர் வரும் 26-ம் திகதி நடைபெறவிருக்கும் கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கி. ச. தலைவரைக் கேள்வி கேட்பதற்கான பிரேரணை ஒன்றை அவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

பிரேரணை வருமாறு:

''கிராமசபையின் புதிய அலுலகத் திறப்பு பற்றிய விசேஷ கூட்டத்தில் பேசுவதற்கு அங்கத்தவர்களுக்கும் இடமளிப்பதாகத் தலைவர் உறுதி அளித்திருந்தும் திறப்புவிழாவின்போது கி. ச. உறுப்பினர்கள் எல்லா விஷயங்களிலும் புறக்கணிக்கப்பட்டதோடு பேசுவதற்கும் சந்தர்ப்பம்அளிக்கப்படவில்லை. விழாவிற்குத்தலைமை வகித்த கிராம சபைத் தலைவரே நன்றியுரையையும் கூறினர். அத்துடன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அ. யோசப் அங்கத்தவர்கள் அனைவரையும் சேர்த்துப் புகைப்படம் எடுக்கும்படி தலைவரிடம் வற்புறுத்திய போதிலும் அவர் அதனை அலட்சியம் செய்து உறுப்பினர்களை அவமானப்படுத்திவிட்டார்.

இத்தவறுக்காக தலைவர் மன்னிப்புக்கேட்டு அங்கத்தவர்கள் அனைவரையும் புகைப்படம் எடுக்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்.''

''உடுப்பிட்டிக் கிராம சபைக்குட்பட தேநீர்க் கடைகளில் சகல சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கும் சமத்துவமாகவும், சுகாதார முறைப்படியும் தேநீர் வழங்க வேண்டுமெனத் தலைவர் உத்தரவிடுவாரா? இக்கொள்கையை ஆதரிக்கும்கட்சியை சேர்ந்த தலைவர் எப்படி நடந்து கொள்வார்'' என்றும் இந்த அங்கத்தவர் கேட்கவிருக்கின்ருர்.

## திருவிழா ரத்து

உடுப்பிட்டி திங்கள்

கரணவாய் தெற்கு, வெற்றிய காட்டுப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவ விசேட திருவிழாக்கள் ஆலயப்பிரவேச முயற்சி காரணமாக ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

தற்பொழுது அபிஷேகம் மட்டுமே செய்வதற்குஆலய தர்மகர்த்தாவால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதிச் சிறுபான்மை வகுப்பினரின் திருவிழாவின் போது ஆலயப்பிரவேசம் செய்யப்போவதாக ஆலயத் தர்மகர்த்தாவிற்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து தர்மகர்த்தா அலங்காரத் திருவிழாக்கள் நடத்துவதற்கு அனுமதி மறுத்துள்ளார்.

ஆனுலும் சிறுபான்மைச் சமூகத்தினர் தமது திருவிழாவை நடாத்தவிரும்புவதாகத் தெரிவித்தனர்.

## பாடசாலை அதிபர்களுக்கு சுற்றறிக்கை

பருத்தித்துறை, திங்கள்

மூன்ருண்டுகளுக்கு முன் ஒவ்வொரு ஆசிரியரும் எக்ஸ்றே படம்பிடித்துஅதில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திக்க வேண்டுமெனக் கல்விப்பகுதி சுற்றறிக்கை விடுத்தும் இன்னும் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பல அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர் இதுவரை அவ்வாறு படமெடுக்கவில்லையென்றும் அவர்கள் உடனடியாக எடுக்க வேண்டுமென்றும் யாழ்ப்பாண சுகாதாரப்பகுதி அத்தியட்சகர் சகல பாடசாலை அதிபர்களுக்கும்விடுத்துள்ள சுற்றறிக்கையில் கூறியுள்ளார்.

## தி. மு. க. வை தடைசெய்ய கோரிக்கை

அக்குருளுவா, திங்கள்

தி. மு. க. வைத் தடைசெய்யஉடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப்பிரதமரைக் கோரும் ஒரு தீர்மானம்கொடகொட கிராமசபையினரால் கிராம சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்துக்கு சபைத் தலைவர் திரு. என். எம். நிமால சனேதா தலைமை தாங்கினர்.

---

உடுப்பிட்டி, திங்கள்

இன்று தமிழினம் அபாயமான எதிர்காலத்தை நோக்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களிடையே ஒற்றுமையும் விழிப்புணர்ச்சியும் இல்லாமையே நாம் பின்தங்கிய நிலையில் சென்றுகொண்டிருப்பதற்குக்காரணமாகும். தமிழினத்தின்சுபிட்சமான வாழ்விற்குக் கடுமையாக உழைக்கும் ஏனைய கட்சிகளின் சில அடிப்படைக் கருத்துக்களை ஏற்றுஅக்கட்சிகளுடன் தமிழ்க்காங்கிரஸ் கட்சி ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றது'.

இவ்வாறு ஆட்சிமன்ற உப சபாநாயகரும், உடுப்பிட்டி எம்.பி.யுமான திரு.மு. சிவசிதம்பரம் நெல்லியடியில் நடைபெற்ற உடுப்பிட்டித் தொகுதி தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கிளையின்ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'இன்றைய அரசியல் சூழ்நிலை' பற்றி உபசபாநாயகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'1947ம் ஆண்டிற்கு முன்னர் ஈழத்தில் தமிழினம் அனுபவித்துவந்த உரிமைகள் இன்று படிப்படியாகப் பறிக்கப்பட்டுவிட்டன. தமிழினத்திற்கெனஒரே தலைமை தோன்றவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தலைவர்கள் ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டுவதன் மூலம் ஒருபோதும் எமது பிரச்னைகளைத் தீர்ககமுடியாது

ஈழத்தில் தமிழினத்தின் துயர்களைய எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தமிழ்க்காங்கிரஸ் தயங்க மாட்டாது. தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் மூன்று எம். பி.க்களும் தொடர்ந்து உரிமைப் போராட்டத்தை நடத்தி வருவோம்.'

மற்றும் சைவப்புலவர் திரு.சி. வல்லிபுரம்,திரு. சி.

## 14 உரசேமிப்பு களஞ்சியங்கள்

கோட்டை, திங்கள்

நாட்டிலுள்ள 11 மாவட்டங்களில் அடுத்த ஆண்டு 14 உரசேமிப்பு களஞ்சியங்கள் நிறுவுவதற்கு உணவு விவசாயஇலாகா தீர்மானித்துள்ளது. உணவுற்பத்திஉபகுழுவினுல் ஏற்கனவே இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களை உரசேமிப்பு களஞ்சியங்களுக்கான இடங்களைக் குறித்து உரகூட்டுஸ்தாபனத்துக்கும், விவசாய சேவை ஆணையாளருக்கும் அறிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

---

— உப சபாநாயகர் அகஸ்தீன், திரு. செல்லையா உட்பட வேறுபலரும் பேசினர்.

## கந்தபுராண விரிவுரை

யாழ்ப்பாணம், செவ்.

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அம்பாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு வரும் வியாழக்கிழமை தொடக்கம் 30-ம் திகதி வரை தினமும் இரவு 6-30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் கந்த புராணவிரிவுரை நிகழ்த்துவார்.

## 100 மாணவர் மேலும் தெரிவு

கோட்டை. திங்கள்

சமீபத்தில் வெளியான ஜீ. சீ. ஈ. உயர்தர பெறுபேறுகளிலிருந்து 189 மாணவர்கள் சர்வகலாசாலையில் பௌதிகக் கல்வி பெறத் தெரிவுசெய்யப்பட்டனர்.

நான்கு பல்கலைக் கழகங்களிலும் மேலும் 100 மாணவர்களைப் பௌதிகக் கல்விக்குத் தெரிவுசெய்வதெனத்தேசியஉயர்கல்விச்சபை தீர்மானித்துள து.இதுபற்றி அடுத்தமாதம் இந்த நூறு மாணவர்களுக்கும் அறிவிக்கப்படுமெனத் தேசிய உயர் கல்விச் சபையைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## 'யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்'

பருத்தித்துறை, திங்கள்

'எமக்கு இந்துப் பல்கலைக் கழகமோ தமிழ்ப் பல்கலைக் கழகமோ வேண்டுமென்பதில் பேதமில்லை. மறைந்த விபுலானந்த அடிகள் கூறியதுபோல, எமக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகமேவேண்டும் அப்பல்கலைக் கழகத்தில் இந்துக் கலாச்சாரத்தைப் புகுத்துவதன் நோக்கம், இராமநாதன், மழவராயர், நாவலர் ஆகியோர் விட்டுப்போன சொத்துக்களை நல்வழியில் உபயோகிப்பதேயாகும். யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடத்தில் இதை நிறுவினுல் இன்னும் 20 ஆண்டுகளுள் அப்பல்கலைக் கழகம் சிங்களப் பல்கலைக் கழகமாகிவிடும்.

நெல்லியடியில்நடந்த ஒருபொதுக்கூட்டத்திற்குத்தலைமைவகித்துப் பேசிய உப சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாளைய உலகம்ஆதார விதிமுறையான அஹிம்சையின் அடிப்படையிலான சமூகமாகவே இருக்கும். அப்படித்தான் இருக்கவேண்டும். அதிலிருந்து மற்றநன்மைகளெல்லாம் பிறக்கும்.'


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆனி மாதம் 10-ந் திகதி (24 6 69)


## நாவலர் வழியனுப்பு விழா

இன்று கொழும் பிலே நாவலர் பெருமானின் உருவச்சிலை ஊர்வலமும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் வழியனுப்பு விழா வைபவங்களும் ஈழத்துச் சரித்திரத்தில் பதியத்தக்கனவாகும். வழியனுப்புவிழாவில் கலந்து கொள்ளும் பெரியார்களின் பெயர்ப்பட்டியலை கவனிக்கையில் நாவலர் பெருமான் சாதி, சமயம், மொழி, கட்சி முதலிய வேற்றுமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு எல்லா பெருமக்களின் அன்பையும் பெருமதிப்பையும் பெற்று எப்படி ஒரு பெரிய தேசிய வீரராகப் பொலிகிறார் என்பது தெளிவாகின்றது

நாட்டின் பிரதமர் டட்லி சேனநாயகா இதில் கலந்து பேசுவது தேசமே அப்பெருமானுக்கு அஞ்சலிசெலுத்துவதுபோலாகும். பிரதமர் ஒரு பௌத்தர் சிங்களவர் என்றாலும் தமிழரும் சைவருமான நாவலர் பெருமானை பிரதமர் மட்டுமல்ல பல்வேறு சமயத்தவரும் கட்சியினரும் மொழியினரும் இவ்விழாவில் கலந்துகொண்டு மரியாதை செய்கின்றனர். இதற்குக் காரணமென்ன?

நாடு மாற்றானுக்கு அரசியல் அடிமைப்பட்டிருக்கையிலே நமது கலாசாரம் சமயம் மொழி முதலியவற்றுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டிருந்தது. அந்த ஆபத்திலிருந்து அவற்றைக் காக்கவும் நாட்டு மக்களுக்குப் புத்துணர்ச்சியும் நம்பிக்கையும் ஏற்படுத்தவும் நாவலர் பெருமான் மிகத் துணிச்சலுடன் வெற்றிகரமாகப் போராடியதுதான். அவரது தியாக வாழ்வு, நம்நாட்டுக்கு பெருமை அளித்து வழிகாட்டுவதுமாகும்.

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் நாவலர் வாழ்ந்த காலத்திலே இருந்த நிலைக்கும் இன்று நம்நாடுள்ள நிலைக்கும் அதிக வேற்றுமையுண்டு. அக்காலத்தில் நாவலர் யாரையாவது எதிர்த்துப் போராடவேண்டி ஏற்பட்டதெனின் அதன் நோக்கம் சைவ சமூகத்தைப் பாதுகாக்கத்தானேயன்றி மற்ற சமயத்தவர்களை எதிர்ப்பதன்றுத. காதமுறைகளில்சிலர் மதமாற்றம் செய்ததையே அவர் எதிர்த்தார். இன்று நல்லவேளையாக அவ்விதம் எதுவுமில்லை. ஆகவே நாவலர் பெருமானின் விழாவைக் கொண்டாடும் இச்சமயத்தில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ மற்றச் சமயத்தவரை புண்படுத்தும் படியான எதுவும் செய்யாதிருப்பது அவசியமாகும், நாவலரைத் தங்கள்விரோதி என்று யாரும் நினைக்கத் தேவையில்லை. வழியனுப்பு விழாவிலே கிறிஸ்தவஇஸ்லாமிய பௌத்த தலைவர்களும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தமுன்வந்துள்ளதே. இலங்கையில் சமய சமரசத்துக்கும்ஒத்துழைப்புக்கும் நல்லதோர் சகுனமாகும்.

நாவலர்பெருமான்இந்துக்களுக்கும் சிறப்பாக சைவர்களுக்கும் உழைத்திருக்கலாம். என்றாலும் அவர் சைவர்களுக்கோ இந்துக்களுக்கோ மட்டுமன்றி தமிழர் அனைவருக்கும் உரியவர். தமிழருக்கு மட்டுமன்றி நாட்டின் மறுமலர்ச்சிக்குப் போராடியதால் அவர் தேசத்துக்கே உரிய பெரிய வீரராவர். அதனாலேயே நாடு இன்று நன்றியுடன் அவரைப் போற்றுகின்றது.

## ரொடீஷிய நிலைமை

ரொடீஷியாவில் ஒரு தலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்ட அயன்ஸ்மித்ர்த்த, அங்கு குடியேறி வாழும் வெள்ளையர் பரம்பரையினரான அயன்ஸ்மித்தும் அவரது சகாக்க

பத்தாண்டு நிறைவு விழா — அலங்கார பவனி

# கந்தர்வ உலகம் போன்று காட்சியளித்தது 'ஈழநாடு' வாயில்

## அதிகாலையிலேயே ஆயிரக்கணக்கானோர் கூடினர்

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற அலங்காரப்பவனி தற்றி திரு. இ. மகாதேவா இங்கு எழுதுகிறார். மிகுதி நாளை தொடர்ந்து வரும்.

மூன்று உழவு யந்திரங்கள் 'ஈழநாடு' நோக்கிப் படையெடுத்து வந்தன. அதுவும் பெட்டிகளுடன். இவ்வளவு அதிகாலையில் எங்கே வருகிறார்கள் என்று அனைவரும் திரும்பிப்பார்த்தனர். 'ஈழநாட்'டில் நெல் கொள்வனவு எப்போ ஆரம்பமானது என்று யாவரும் வியந்து கொண்டிருக்கையில் 'ஈழநாடு' வாசலில் இராணுவ வாகன வரிசைபோல அவை நிறுத்தப்பட்டன. சாரதிகளில் சிலர் கம்மென்று இறங்கு பீடியில் ஒரு தம்மடிக்கப் போய்விட்டார்கள்.

மெல்லிசை காற்றில் மிதந்துவந்தது. ஒரு வாகனத்தில் ஒலியும் கேட்டது. நின்ற பலரும் அதைப் போய் மொய்த்துக்கொண்டார்கள். அதிகாலை 3-30 மணிக்கே புறப்பட்டோம் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள் அந்த இசைக் குழுவினர்.

அதன்பின் சொல்லவேண்டுமா? அலங்கார வாகனங்கள்! சிங்கார உடையணிந்தோர்! பெரியதும் சிறியதுமாம் சிவன்கோவில் மேலை வீதி முழுவதையுமே, மறைத்து நின்றது.

எதிர்த் திசையில் வந்த இரண்டு தட்டு பஸ்களில் 'ஈழநாடு' விழாவுக்கென நெருங்கியடித்து வந்து கொண்டிருந்த சனங்கள் எட்டிப்பார்த்தபடியே சென்றனர். இவர்கள்ஆவல் தாங்கமாட்டாமல் குதித்து இறங்கியும் விட்டனர். கண்ணாடியுடன் முகத்தை அழுத்திப் பிடித்திருந்தமையால் மூக்குத் தட்டையாகி விட்டதென்று குறைப்பட்டுக் கொண்டாராம் ஒருவர்.

ஒலிபெருக்கியுள்ள வாகனங்களும் ஒலி பெருக்கி இல்லாத வாகனப் பாட்டு, வாத்திய, இசை வர்த்தக, விளம்பரமென அலறிக் கொண்டேயிருந்தன.

8 மணிக்கு முன்னர் படுக்கையை விட்டு எழுந்திருக்காத அந்த வீதியிலுள்ள வீட்டைச் சேர்ந்த ஒருவர் கண்ணைத் துடைத்துக் கொண்டு வந்து தெருவை எட்டிப் பார்த்தார். ஒரு கந்தர்வ உலகம் அப்படியே அங்கு இறக்குமதி செய்யப்பட்டிருப்பதைக் கண்டார். தூக்கம் பறந்தது வாயெல்லாம் பல்லு நிறைந்தது. காலைக்கோப்பியையும் மறந்து எதைப்பார்ப்பது எதை விடுவது என்று தெரியாமல் 'ஈழநாடு' காரியாலயத்திலிருந்து முட்டாசுக் கடைச் சந்திவரை குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். வாகன உரிமையாளர்கள் வர்த்தக பவனி என்ற அட்டைகளை எடுத்து தங்கள் வாகனத்தில் ஒட்டிக் கொண்டிருந்தார்கள்.

மார்க்கண்டேயர் வரலாற்றைச் சிந்திக்கும் வாகனம் ஒன்று பாலமுருகன் பக்குவமாய் அமர்ந்திருக்கும் கோவில் ஒன்று, வாத்திய இசைக் குழுவினர் நான்கு, பைலாக் கோஷ்டிகள் மூன்று, சினிமா விளம்பரங்கள் இரண்டு, இலவச சவர்க்கார விநியோகம் செய்த வாகனங்கள் நான்கு இலவச தொப்பி வைக்கட்டுகள் விநியோகம் செய்த வாகனம் ஒன்று. இவ்வாறு

முண்டியடித்து நெருங்குகிறார்கள். சமாளிக்கச் சிரமமாயிருந்தது. எல்லா வாகனங்களிலும் அமைதியாக இருக்கவேண்டுமென ஒலி பெருக்கியில் அறிவிக்கப்படுகின்றது. திடீரென நிசப்தம்.

'தமிழ்பேசும் மக்களுக்காக தமிழரால் நடாத்தப்படும் தனித் தினசரியான 'ஈழநாடு அப்பவனியைப் பார்க்க வந்தோர், பங்கு கொண்டோருக்கு தனது வணக்கத்தையும், வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது என்று அறிவிக்கப்படுகிறது அறிவிப்பாளர் வாகனத்திலிருந்து. பொலிஸ்சுப்பிரிண்டன் வருகின்றார். 'மைக்'கை கையில் வாங்குகின்றார். அழகு தமிழில் ஆரம்பிக்கிறார் 'சுந்தர்'. பத்தாண்டு சேவையைப் பாராட்டினார். பவனியைப் பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார். விழா சிறப்புற்று வெற்றிபெற ஆசி கூறினார்.

''ஆரம்பிக்கட்டும் ஊர்வலம். ஒரே ஆரவாரமும், பாட்டும் கூத்துமாய் இருக்கட்டும். யாழ் நகர் அனைத்தும் உங்கள் மகிழ்வொலி முழங்கட்டும் உங்கள் கும்மாளத்துக்குக் கட்டுக்காவல் எதுவும் இல்லை. ஈழநாட்டின் பத்தாண்டு நிறைவு விழாவின் இரண்டாவது நிகழ்ச்சியைப் பார்க்க வந்திருப்போர் அனைவரும் மானிப்பாய் வீதிவழியே பரந்துநில்லுங்கள். இத்தனை வாகனங்களும் உங்களைத் தாண்டிச் செல்லும்போது பார்த்து மகிழுங்கள்! கண்டு களியுங்கள்!!! நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு அறிவிப்பாளரின் குரல் ஒலி பெருக்கிவழியே வெளி வந்தது.

எல்லோரும் படபடப்பும் அவசரமும்கொண்டிருந்த இவ்வேளையில் காலையில் இருந்துநிதானமாய் அமைதியாய் ஒரே ஒரு மனிதர் மட்டும் நின்றுகொண்டிருந்தார். அவரது முகத்தில், பார்வையால், எந்தவித சலனமும் இல்லை. அடிமனதில் எத்தனையோ எண்ண அலைகள் சுழன்றடிக்கக் காரணமிருந்தது. ஆனந்தத்தின் எல்லைக்கோட்டில் அவர்நிற்கவும் காரணம் இருந்தது. அவர் பெற்ற

### 50ம் ஆண்டு யூபிலி

பண்டத்தரிப்பு, திங்கள்

திருக்குடும்ப சபையைச் சேர்ந்த கன்னியர் இருவர் தமது 50ம் ஆண்டு யூபிலியைக் கண்டு களித்தனர் இளவாலை திருக்குடும்ப சபை, பண்டத்தரிப்புத் திருக்குடும்ப சபையைச் சேர்ந்த சங். செபஸ்தியான், சங். எட்வேட் ஆகிய கன்னியரே யூபிலியைக் கொண்டாடியவர்களாவர். பண்டத்தரிப்புத் திருக்குடும்ப சிற்றாலயத்தில் நடைபெற்ற நன்றியறிந்த தோத்திரப் பூசைகளில் இவர்களின் சபையைச் சேர்ந்த கன்னியர் பலரும் கலந்து கொண்டனர்.

### இ.போ.ச.பயிற்சி கல்லூரி மூடப்பட்டது

கோட்டை, திங்கள்

700 பயிற்சியாளர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்ததன் காரணமாக வெஹரவிலுள்ள இலங்கை போக்குவரத்துச்சபையின் இலங்கை ஜெர்மன் கூட்டுப் பயிற்சி கல்லூரி சனிக்கிழமையன்று மூடப்பட்டது.

பயிற்சிக் கல்லூரியில் ஒழுக்கமின்மையை ஆராய்ந்து அதைப் போக்குவதற்கான வழிவகைகளைச் சிபார்சு செய்யுமாறு சபை மூன்று பேர் கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளது.

### பாரதம் இலங்கைக்கு உதவி

கோட்டை, திங்கள்

இலங்கை கைத்தொழில் பொருட்களையும் வேறு போக்குவரத்து வாகனங்களையும் வாங்குவதற்குபாரத அரசாங்கம் 5 கோடி ரூபா வழங்கியுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. தினேஷ்சிங் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது இந்த நிதிஉதவியை

## தீவுப் பகுதிச் செய்திகள்

— நமது நிருபர் —

### சைவம் சிறக்க ..

அல்லைப்பிட்டி, திங்கள்

'காலத்துக்குக் காலம் சைவப்பெரியார்கள் தோன்றுவதன் மூலம்தான் சைவ மதம் மேலோங்கியுள்ளது. மணிவாசகர்போன்றசைவப் பெரியார்கள் தோன்றுவதன் மூலம் தான் இன்று நமது சமயத்திற்கேற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்க்கமுடியும்'' என வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசைவிழாவின்போதுசொற்பொழிவாற்றிய ஆசிரியை செல்வி கந்தையா குறிப்பிட்டார்.

0 0 0

### தீவுப்பகுதி மின்சாரமயமாகும்

தீவுப்பகுதியிலுள்ள

# ஐயாறன் எழுதுவது

கருத்து சுதந்திரம் என்ற போர்வையில் நாவலரை அவமதிக்கும் முறையிலே விஷமத்தனமான ஒரு துண்டுப் பிரசுரத்தை சில அன்பர்கள்ஆத்திரத்துடன் கொண்டுவந்துகாட்டி, இதற்குத் தக்க பதில் அளிக்கவேண்டுமென்று கேட்டனர். எனக்கும் தபாலில் அவ்வித தூற்றல் பிரசுரம் கிடைத்தது.

அதைப்படித்ததும், பக்கத்திலுள்ள குப்பைக்கூடையில் கசக்கிப்போட்டுவிட்டுஅதை மறந்து விட்டேன். பதில் சொல்லவேண்டியதகுதி அதற்குச்சிறிதுமில்லை. ஆகவே, வந்தநண்பர்களையும்இதைப் பற்றி கவலைப்படாமல் மறந்து விடும்படி சொன்னேன்.

தியாக வீரரான நாவலர் பெருமான் ஒரு நூற்றாண்டுக்குமுன் 'எழுதியபோது, சமூகம் இருந்த நிலைக்கும், இப்போதுள்ள நிலைக்கும் அதிக வேற்றுமையுண்டு. காலச்சக்கரம் அதிவேகமாகச் சுழன்று வருகிறது. சைவ சமயத்தைப்பற்றியஉண்மைகளும், ஆசார அனுஷ்டானங்களும் சைவர்களுக்கே தெரியாது. சைவர்கள் அவற்றை அறிந்து கூடுமானவரை அப்படி வாழவே அவர் எளிய நடையிலே பாலர்களுக்கென பல புத்தகங்களை வசனநடையில் எழுதிவைத்தார்,

அவர் சாதியைவிட சமயமே முக்கியமென்று பல இடங்களிலும் வற்புறுத்தியுள்ளார் பெரியபுராணத்திலே பல சாதிகளையும் சேர்ந்த அடியார்களும் உள்ளனர். அவர்கள் எச்சாதியை சேர்ந்திருப்பினும் சிவனடியாராகில், 'அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என்று அப்பர் சுவாமிகள் பாடியிருக்கையில், அதற்கு பாறான கருத்தை நாவலர் பெருமான் கொண்டிருக்க முடியுமா?

0 0 0

வண்ணைநகர் சிவன்கோவிலில் சென்ற வெள்ளிக்கிழமை பெரியபுராண படனத்தை 'சிவதொண்டன்' பத்திரிகை அசிரியரான வித்வான் நடராஜன் அவர்கள் ஆரம்பித்துள்ளார். நாவலர் பெருமான சைவப்பிரசாரம் செய்த அதே கோவிலில் இந்த புராண படனம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடப்பது குறிப்பிடத்தக்கதாகும். சாதி உயர்வு தாழ்வுகளை சைவசமூகத்திலிருந்து அகற்ற ஏதாவது ஒரு நூல் உண்டென்றால் அதுவே பெரியபுராணமாகும்.

சாதி இறுமாப்புடன் பேசிய சுந்தரர், தடுத்தாட் கொள்ளப்பட்டதும், தில்லைவாழ் அந்தணர் தம்அடியார்க்கும் அடியேன், திருநீல கண்டத்துக் குயவனார்க்கடியேன்' என்று மனம் திரும்பி, அடியேன் அடியேன் என்று கதறிக் கதறிப் பாடியுள்ளதன் நோக்கமென்ன?

சாதி இறுமாப்பு அறவே நீங்கிவிட்டதைக் காட்டவில்லையா? அவர்பாடியதிருத்தொண்டத் தொகையை அடிப்படையாகக் கொண்ட பெரியபுராணம் இதற்கு மாறாக இருக்குமா? பெரிய புராணத்தை எளிய வசன நடையிலே பலரும் அறிய புத்தகமாக வெளியிட்ட நாவலர் பெருமானின் நோக்கமும் வேறெவ்விதமிருக்கமுடியும்?

0 0 0

இந்த சிவன் கோயிலில் நாயன்மார்களின் உருவச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதைக்கண்டேன். அதில் 7 நாயன்மார்களின் சிலைகள் மட்டும்காணவில்லைஎன்றும், தமிழகத்திலுள்ள பல ஆதீனங்களுக்கும் எழுதி, 63 நாயன்மார்களின் படங்களையும் அனுப்பிவைக்கக் கேட்டிருப்பதாயும் வண்ணையிலுள்ள புகழ்பெற்ற நடராஜ ஆச்சாரியார் இவற்றைச் செய்துதர ஒப்புக்கொண்டிருப்பதாயும் ஓர் அன்பர் தெரிவித்தார். இவற்றைச் செய்து முடித்ததும் தை மாதத்தில் 63 நாயன்மார்களையும் அக்கோயிலில் பிரதிஷ்டை செய்யவிருப்பதாகவும் அதற்குப் பணம் தேவைப்படுமென்றும்அறிய வந்தேன். வடஇலங்கையிலே எந்தக் கோயிலிலும் 63 நாயன்மார்களின் உருவச்சிலைகள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் புண்ணிய கைங்கரியத்துக்கு உதவிசெய்ய முன்வருபவர், சாதி எனும் ஆணவம் சைவசமூகத்திலிருந்து நீங்கவும் உதவுபவராவர்.

0 0 0

சங்கநிதி பதுமநிதி இரண்
டும் தந்து
தரணியொடு வானாளத்
தருவரேனும்,
மங்குவார் அவர் செல்வம்
மதிப்போமல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்த
ரல்லராகில்,
அங்கமெலாம் குறைந்த
ழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
புலையரேனும்,
கங்கைவார் சடைக்கரந்
தார்க் கன்பராகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதுமாகும்.

## ரொடீஷிய நிலைமை

ரொடீஷியாவில் ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்ட அயன்ஸ்மித் தலைமையிலான சிறுபான்மை வெள்ளையரின் ஆட்சியை ''சட்டவிரோதம்'' என்று பிரகடனம் செய்த பிரிட்டிஷ் அரசாங்கம் அதற்கெதிராக எடுத்த 'சாத்வீக' நடவடிக்கைகளில் தோல்வியடைந்துள்ளது மட்டுமல்லாமல் அயன்ஸ்மித் சென்ற வெள்ளிக்கிழமை எடுத்த 'சர்வ ஜனவாக்கெடுப்பின் மூலம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முகத்தில் கரிபூசியிருப்பதையும் பொறுத்துக் கொண்டிருக்கிறது. புதிய இன ஒதுக்கல் கொள்கையைப் பின்பற்றும் ரொடீஷிய அயன்ஸ்மித் ஆட்சியாளர்மீது, இன ஒதுக்கலை வெறுப்பவர்களென்றும் உலகில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் இரட்சகர்களென்றும் கூறிக் கொள்ளும் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் மற்றும் வல்லரசுகளும் என்ன செய்யப்போகின்றன?

நாற்பத்தினுன்கு லட்சம் ஆபிரிக்க சுதேசி மக்கள் வாழ்கின்ற ஆபிரிக்க நாடான ரொடீஷியாவில் வந்தேறு குடிகளின்பரம்பரையினரான அயன்ஸ்மித்தும் அவரது ஆட்களும் சுமார் இரண்டே கால் லட்கம் பேர்தான் வாழ்கின்றனர். ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் சுரண்டி வாழ்ந்த வெள்ளையர் அந்நாடுகளில் தோன்றிய சுதந்திர எழுச்சி காரணமாக மூட்டைமுடிச்சுகளைக் கட்டிக் கொண்டு வெளியேற நேர்ந்தது. தெற்கு ஆபிரிக்காவில் மத்திய கிழக்குப்பகுதியிலுள்ள ரொடீஷியா முன்னர் தென் ரொடீஷியா எனவழங்கப் பட்டுவந்தது. வடக்கு ரொடீஷியா விடுதலை பெற்று ஸாம்பியா எனப் பெயர்பெற்றுள்ளது ரொடீஷிய சுதேசிமக்களின் சுதந்திரக் கோரிக்கைக்கு செவிமடுத்த பிரிட்டிஷ் ஆட்சியாளர் அங்கு பெரும்பான்மை மக்களின் ஆட்சியை ஏற்படுத்த முன்வந்தனர். இதை எதிர்த்த, அங்கு குடியேறி வாழும் வெள்ளையர் பரம்பரையினரான அயன்ஸ்மித்தும் அவரது சகாக்களும் பிரிட்டிஷ் ராணியையும் பிரிட்டிஷ் ஆட்சியையும் உதாசீனம்செய்து ரொடீஷியாவில் ஒருதலைப்பட் சமாக சிறுபான்மையினரின் வெள்ளையர் ஆட்சியைப் பிரகடனப்படுத்தி சுதேசிகளைக் கொடுமைப்படுத்தியும் வருகின்றனர். இந்தச் சட்டவிரோத நடவடிக்கையை உலக நாடுகளும் ஐ. நா. வும் வன்மையாக எதிர்த்தன. ஆசிய ஆபிரிக்க நாடுகளின் எதிர்ப்பைக் கண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் ரொடீஷியாவுக்கெதிராகப் பொருளாதாரத் தடைநடவடிக்கைகள்சிலவற்றை மேற்கொண்டதுடன் அயன்ஸ்மித்துடன் சமரசப் பேச்சும் நடத்தியது. 'உனக்கும் பெப்பே உன் அப்பனுக்கும் பெப்பே' என்றமுறையில் அயன்ஸ்மித்தும் அவரது சகாக்களும் நடந்துள்ளனர். ரொடீஷியாவில் பெரும்பான்மையினர் ஆட்சிக்கே இடமில்லாதவகையிலும் பிரிட்டனின் கட்டுப்பாட்டை உதறித் தள்ளும் முறையிலும் அங்கு புதிய இன ஒதுக்கல் கொள்கையைப் பின்பற்றும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி ரொடீஷியவை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்த வெள்ளையரின் வாக்குகளைப் பெற்றிருக்கின்றனர்

ஐ. நா- தலைமைக்காரியதரிசி இதை மிக ஆபத்தான போக்கு என்று கூறியிருக்கிறார். உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. ஏடனிலும் கரிபியன் தீவிலும் படைபலம் காட்டிய பிரிட்டன் இனியும் ரொடீஷிய விஷயத்தில் 'சாத்வீகத்தைதான் கைக் கொள்ளப்போகிறதா, ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் பாதுகாக்கப் பல்லாயிரம் மைல்களுக்கப்பால் செல்லும் அமெரிக்கரும் பிரிட்டிஷாரும் என்ன செய்யப்போகிறார்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தார் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு திகதி ஜூன் மாதம் 24ம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

செல்வி கந்தையா குறிப்பிட்டார்.

0 0 0

### தீவுப்பகுதி மின்சாரமயமாகும்

தீவுப்பகுதியிலுள்ள பல கிராமங்கள் மிக விரைவில் மின்சார மயமாகவிருக்கின்றது. இதற்கான பூர்வாங்க வேலைகளை மின்சாரப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர் ஊர்காவற்றுறை, நாரந்தனை, வேலணை ஆகிய இடங்களே மின்சாரமயமாகும் கிராமங்கள். தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரெத்தினத்தின் முயற்சியாலேயே துரித வேலைகள் நடைபெறுகின்றது. மேற்படி கிராமங்களுக்கு இவ்வருட முடிவிற்குள் மின்சாரவசதி கிடைக்குமெனத் தெரியவருகிறது.

0 0

### பஸ்நிலையம் நிறுவப்படும்

புங்குடுதீவில் பஸ்நிலையமொன்று வெகுவிரைவில் நிறுவப்படவிருக்கின்றது. இந்நிலையம் குறிகாட்டுவானில் நிறுவப்படுமெனவும் இதனை நிறுவுவதன் பொருட்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் குறிகாட்டுவான் பகுதியிலுள்ள முடிக்குரிய நிலத்தில் இரண்டேக்கர் காணியைச் சுவீகரித்துள்ளனர்.

0 0 0

### கிராமசபைக்கு கடனுதவி

நாரந்தனைக் கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதி மக்களுக்கு மின்சாரவசதி அளிக்கும்பொருட்டு அரசாங்கம் இரண்டுலட்சத்து பதினுலாயிரம் ரூபா கடனுக வழங்கியுள்ளது.

0 0 0

### இறுதி ஆட்டம்

மாணிக்கம் வெற்றிக்கேடயத்திற்காக கரம்பன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும். பரிசில் வழங்கலும் இம்மாதமுடிவில் நடைபெறவிருக்கின்றது. இப்போட்டியில் தீவுப்பகுதியைச் சேர்ந்த பல விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

0 0

### விளையாட்டுப் போட்டி

வேலணை மத்திய மகாவித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் அடுத்தமாதம் பன்னிரண்டாம் திகதி மேற்படி கல்லூரி விளையாட்டு மைதானத்தில்நடைபெறவிருக்கின்றது.

கள் மூன்று, சினிமா விளம்பரங்கள் இரண்டு, இலவச சவர்க்கார விநியோகம் செய்த வாகனங்கள் நான்கு இலவச காப்பிப் டைக்கட்டுகள் விநியோகம் செய்த வாகனம் ஒன்று. இவ்வாறு வாகனங்களோ பலரகம்.

தேனை மொய்க்கும் ஈக்கள் போல மக்கள் கூட்டம் வாகனங்களை மொய்த்ததில் வியப்பில்லை. 8மணி அணுக அணுக மிகுந்த பரபரப்பும் ஆவலும் பங்கு கொள்வோரிடத்திலும் பார்வையாளரிடத்திலும் உண்டாயிற்று. பொலிஸ் வாகனம் மூன்றில் வந்து குதித்தனர் நகர்க் காவலர். இன்னெரு வாகனம் ஊர்வலப் பாதையில் சந்திகள்தோறும் 'காக்கிச் சட்டைக்கார'ரை இறக்கிச் சென்றது.

புறப்படுமுன்னர் வாகனங்கள் அனைத்தையும் நடுவர்கள் பார்வையிடப் புறப்படுகின்றனர். தெரு நீளம் முழுவதும் பார்க்க முடியாதமக்கள் மரங்களில், சுவர்களில், வீட்டுக் கூரைகளில் ஏறி நின்று தலையை நீட்டிப் பார்த்தனர். 'ஈழநாட்'டின் மேல் மாடி வண்ணத்தில் பூச்சிகள் போல் வண்ணச் சேலைகள் அணிந்த வனிதையரால் நிரம்பி வழிந்தது

ஊர்வலத்தைத்தொடக்கி வைத்து ஆசிகூற வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் வந்திறங்கினார். இந்த வேளைபார்த்து இரண்டு மாட்டு வண்டில்கள் குறுக்கே வந்தன. இரண்டிலும் இரு தம்பதிகள். ஒன்றில் ஒரு கொள்ளை பிள்ளைகள். மற்றதில் பிள்ளைகள் இரண்டு மட்டும். பொலிஸார் அவர்களை வேறு பாதைக்குத் திருப்ப முனைந்தனர். இப் பவனியில் பங்குகொள்ளவந்தவர்கள் தானென்று நிர்வாகிகள் கூறியதன்பின்னர்தான் அது ''குடும்பக்கட்டுப் பாட்டுப் பிரச்சாரவண்டி'' என்று தெரியவந்தது.

ஆரம்பத்தில் அறிவிப்பாளர்களைக்கொண்ட கண்காணிப்பு ஜீப் அதனையடுத்து பொலிஸ் ஜீப். அதனையடுத்து நிறுத்தப்பட்ட 'ட்ராக்டர்' ஒன்றில் ஒரு தவில்காரனும், நாதஸ்வரக் காரனும் வந்து ஏறினர். விநோதஉடை நன்ருக இருக்கிறதென்று மக்கள் அவர்களைப் போட்டிபோட்டு பார்த்தனர். அவர்களுடைய மங்களவாத்தியம் முழங்க ஆரம்பித்பித்தது.

நேரம்போகிறதே யென்று எல்லோரும் அங்கலாய்க்கிருர்கள். நடுவர்களோ வாகனங்களைப் பார்த்து முடிக்கவில்லை. மக்களோ சலனமும் இல்லை. அடிமனதில் எத்தனையோ எண்ண அலைகள் சுழன்றடிக்கக் காரணமிருந்தது. ஆனந்தத்தின் எல்லைக்கோட்டில் அவர்நிற்கவும் காரணம் இருந்தது. அவர் பெற்ற பிள்ளை பத்து வயதுக் குமரனுய் துள்ளித்திரியும் பருவத்தை அடைந்துவிட்ட வேளையில் எவருக்குத்தான் குதூகலமாய் இருக்காது. அவர் வேறு யாருமல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னரே தமிழரின் தலையாய தேவையொன்றை கனவு கண்டு நனவாக்கிய 'ஈழநாட்'டின் ஸ்தாபகரும் நிர்வாகியுமான திரு. கே. ஸி. தங்கராசா அவர்கள்.

(மிகுதி நாளை தொடரும்)

### நாவலர் கொடி

உடும்பராய், திங்கள் நாவலர் விழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நாவலர் கொடிவாரத்தைக் கோப்பாய்த் தொகுதியில் உள்ள ஆசிரியர்களும், மாணவர்களும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். கோப்பாய்த் தொகுதியில் கொடிவிநியோகம் செய்வதற்கென நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் திரு. க. இராசரத்தினம், அ. பஞ்சாட்சரம், எஸ். சரவணபவன் உட்பட குறித்த குழுவினர் கோப்பாய்த் தொகுதிப் பாடசாலைக்குச் சென்றபோது நாவலர் கொடிகளை ஏராளமாகப் பெற்றுக் கொண்டதுடன் ஆசிரியர்கள் நிதிஉதவியும் பெருமளவில் புரிய முன்வந்தனர்.

### நாவலர்...

((1-ம் பக்கத் தொடர்ச்சி) ணுறு செல்வச்சந்நிதி, காரைநகர் சிவன்கோவில் ஆகிய தங்குமிடங்களில் தங்கும். தங்குமிடங்களில் கலைநிகழ்ச்சிகள் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. 28-ந் தேதி நண்பகல், சிலை பவனியை முடித்து யாழ்ப்பாணமாநகரசபைஎல்லையை வந்தடையும்.



### கல்வி

கலை / விஞ்ஞானம்/வர்த்தகம் ஆகிய பாடங்களில் மாணவர் வீடுகளிலும், நிலையத்திலும் ஜீ. சீ. ஈ. சாதாரண உயர்தர மாணவர்களுக்கு தராதரமுள்ள அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் 'டியூஷன்' சொல்லிக் கொடுக்கப்படும். திறமையான சித்திக்கு உத்தரவாதம். யுனைடெட் இன்ஸ்டிடியூட், 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1032


அரசாங்கம் 5 கோடி ரூபா வழங்கியுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. தினேஷ்சிங் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது இந்த நிதிஉதவியை இலங்கை அரசாங்கம் அவரிடம் கோரியிருந்தது.

இலங்கைக்கு விஜயம்செய்திருந்த பொழுது திரு. தினேஷ்சிங் வர்த்தக அமைச்சராகக் கடமையாற்றினர். இந்திய அரசாங்கம் இத்துடன் மூன்றுதடவை இலங்கைஅரசாங்கத்துக்கு நிதியுதவி செய்துள்ளது 66,67ம் ஆண்டுகளிலும் நிதிவழங்கியுள்ளது. பலவகை போக்கு வரத்து வாகனங்கள் பாரிய கைத்தொழில் உபகரணங்கள், விவசாய யந்திரங்கள் ஆகியன இந்த 5கோடி ரூபாவுக்கும் இறக்குமதி செய்யப்படலாம்.

பம்பாயில்

### 500 டாக்டர்கள் வேலைநிறுத்தம்

புதுடில்லி, ஜூன் 23 பம்பாயில் முனிசிபல் ஆஸ்பத்திரிகளில் வேலை பார்க்கும் சுமார் 500 டாக்டர்கள் இன்று காலவரையற்ற வேலைநிறுத்தமொன்றை ஆரம்பித்தார்கள். இந்த வேலைநிறுத்தத்தால் மருத்துவ நிலையங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள டாக்டர்கள் வெளிநோயாளர்களுக்கு சங்கடம் ஏற்படாத முறையில் ஆஸ்பத்திரிகளுக்கருகிலேயே சிகிச்சை நிலையங்களை ஆரம்பித்திருக்கிறார்கள்.

### ஒத்திவைக்கப் பட்டது

அராலி கொட்டைக் காட்டைச் சேர்ந்த அம்பிகாபதி என்னும் இளம் பெண் தான் பிரசவித்ததாக கூறப்படும் சிசு ஒன்றை கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் ஜனுப் முகமட் ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, உதவிப் பொலிஸ் சுப்ரீன்டன் எஸ் ஐ.அலிஸ் சாட்சியமளித்தார். எதிரி சார்பில் வழக்கறிஞர் தளையசிங்கம், யோகநாதன் ஆஜராஞர். மேல் விசாரணை இம்மாதம் 26-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நடப்பது குறிப்பிடத்தக்கதாகும். சாதி உயர்வு தாழ்வுகளை சைவசமூகத்திலிருந்து அகற்ற ஏதாவது ஒரு நூல் உண்டென்றால் அதுவே பெரியபுராணமாகும். 'அந்தணனுகப்பிறந்த நான் மற்றோர் அந்தணனுக்குஅடிமைப்படுவதென்பது எப்படி முடியும்?' என்று முதலில்

அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக்கறந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே.
—அப்பர் அடிகள்

## 'ஆலயத்திற்குள் சிலரை மட்டும் அனுமதிப்பதால் பிரச்னை தீராது'

யாழ்ப்பாணம், திங்கள் ஆலயத்திற்குள் செல்ல ஒரு சிலருக்குமாத்திரம் அனுமதி வழங்கி மற்றையோருக்கு ஆலயக்கதவை அடைத்துவைத்தலால் ஆலயப்பிரவேச பிரச்னைக்கு தீர்வு காணமுடியாது. இப்படி செய்வது, சிறுபான்மைத் தமிழர்கள் மேலும்நசுக்கப்படுவதோடு, குழப்பங்களுக்கும் வழிவகுக்கும்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம், ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பொலிசார் சமூக குறைபடொழிப் புச்சட்ட விதிகளைச் செயற்படுத்துவதில் இனிமேலும் தயங்கக் கூடாதென எங்கள்இயக்கத்தினர் தங்களைக் கோருகின்றனர்.

இச்சட்டம் சமூக குறைபாடுகளை நீக்கும் என்ற நம்பிக்கையோடு எமதியக்கத்தினர் கடந்த 3 வருடங்களாகப் பொதுக் கூட்டங்கள் கூடியும் இந்துசமய நிறுவனங்களோடு பேச்சுவார்த்தைகள் நடாத்தியும் முயன்றுள்ளனர். உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற தொண்டைமானுறு செல்வசந்நிதிபோன்ற சில ஆலயங்களின் ஆலயப்பிரவேச வழக்குத் தீர்ப்புகள் மேலும் எங்களுக்கு நம்பிக்கையூட்டுவனவாகவிருந்தன.

ஆனல் தீர்ப்புகள் இவ்வாறு இருப்பினும் சாதித்திமிர் பிடித்த சில இந்துக்கள் இச்சட்டம் செயல்படாதவாறு வேறு சில நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். இத்தகைய கடைசிநடவடிக்கை மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் திரு. சி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றதாகும். இந் நடைமுறையை வேறு சில ஆலயங்களும் பின்பற்றுகின்றன. அதாவது விழாவின் போது பூஜை செய்பவர்களையும் குறிப்பிட்ட சில தொண்டர்களையுமே ஆலயத்துக்குள் விடுவதாகும். மற்றவர்கள் எல்லோரும் வெளியில் நின்றே வணங்க வேண்டும். இதேபோன்ற நடைமுறை அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது. இந்தமுறையை அப்பொழுதிருந்த அரசாங்க அதிபரும் அங்கீகரித்துள்ளார் இதுவே துப்பாக்கிப் பிரயோகம் போன்ற கடும் நடவடிக்கை எடுப்பதற்கும் காரணமாகவிருந்தது.

ஆகவே முன்பு ஒருபொழுதும் இவ்வாறு தொண்டர்களை விழாக்காலங்களில் கட்டுப்படுத்தும் முறை இருக்கவில்லை என்பதை வற்புறுத்த விரும்புகிறோம். இம்முறை சாதி விருப்புள்ள இந்துக்களால் மேற்படி சட்டத்தைச் செயல்படாதவாறு தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். மேலும் இத்தகைய இந்துக்களும் அவர்களது நிறுவனங்களும் இச்சட்டத்தை செயல்படாதவாறு தடுக்க தங்களது இலாகாவின் ஆதரவைத் தேடுவது ஆச்சரியத்தை விளைவிக்கிறது.

ஆதலால் நாங்கள் தங்களை எங்கள் வேண்டுகோள்களை மிக அவசியமானதாகக் கருதி எங்கள் இயக்கத்துக்கு ஆதரவு தர வேண்டுமெனவும் அதே வேளையில் இவ்விடயம் சம்பந்தமாக நீதிமன்றங்களின் தீர்ப்புகளைச் செயல்படுத்தவும், சமூக குறைபாட்டொழிப்புச்சட்டம் செயல்படாதவாறு மேற்கொள்ளப்படும் கடும் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தித் தடைசெய்யுமாறும் கோருகிறோம்.

### அபிஷேகம் பெற்றார்

பண்டத்தரிப்பு, செவ். யாழ்ப்பாணப் பிரிவைச் சேர்ந்த காலஞ்சென்ற ஜே. இராசரத்தினம் தம்பதிகளின் புதல்வரான பிளோறன்ரைன் இராசரத்தினம் கனடாவில் இம்மாதம் 22ம் திகதி குருவாக அபிஷேகம் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org